

1926 - 1995

# எஸ். அகஸ்தியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகஸ்தியர் என்ற எங்கள் பப்பா...

6. 1. 1996

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கைச்சுருக்கம்.

உலகில் வாழும் சகல ஜீவன்களும் என்றோ ஒருநாள் தத்தமக்கென்ற முடிவைத் தாம் விரும்பியோ, விரும்பாமலோ ஏற்றுத்தானாகவேண்டும். எல்லோர் வாழ்விலும் இது நியதியென்றாலும் அவரவர் வாழ்ந்த வாழ்க்கை முறையைக் கொண்டே இம் முடிவு முக்கியத்துவம் பெறுகிறது. புகழும், இகழும் இதை வைத்தே கிடைக்கப்பெறுகின்றது. சாதாரண மனிதனும் மனிதகுல மேம்பாட்டுக்குழைத்த மகானும் மரணிக்கும்போது எவ்வளவு வேறுபாடுகள்! இவ்வகையில் இவ்வுலகில் வாழ்ந்த அறிஞர்கள், கலைஞர்கள், புத்திஜீவிகள், மகான்கள், தேசாபி மானிகள், விடுதலை வீரர்கள் இவ்வுலகை விட்டு நீங்கும்போது சகலரது இதயங்களிலும் நீங்காத இடத்தைப் பெற்று விடுகிறார்கள். கடந்த டிசம்பர் மாதம் 8ம் திகதி (1995) எம்மையெல்லாம் அதிர்ச்சியிலும், தாங்கொணாத் துயரிலும் ஆழ்த்திவிட்டுத் தன் பயணத்தை ஆரம்பித்த இலங்கையின் மூத்த எழுத்தாளரும், இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கச் செயற்குழு உறுப்பினருமான திரு. எஸ். அகஸ்தியர் அவர்கள் சாதி, மத, இன, மொழி, பிரதேச, அரசியல் பேதமற்ற முறையில் எங்கள் எல்லோரது இதயங்களிலும் நீங்காத இடம் பிடித்துவிட்டார் என்றால் அது மிகையாகாது.

*தோன்றில் புகழுடன் தோன்றுக அஃதிலார்*
*தோன்றலின் தோன்றாமை நன்று*

என்ற வள்ளுவன் கூற்றுக்கிணங்க அவர் வாழ்ந்தே காட்டிவிட்டார். அவர் மறைவு கேட்டுப் பதைபதைத்து ஓடோடி வந்து, அவர் அன்புத் துணைவியாருக்கும், ஆருயிர்ச் செல்வங்களுக்கும் ஆறுதல் கூறிய அன்பர் கூட்டமும்; தம் அனுதாபங்களையும், அஞ்சலியையும் சகலவித செய்தித் தொடர்பு சாதனங்களினூடாக அனுப்பிவைத்த உள்ளூர், வெளியூர் அன்பர்கள், நண்பர்கள், கலைஞர்கள், அறிஞர்கள் மற்றும் பல்வேறுபட்ட ஸ்தாபனங்களின் எண்ணிக்கையும் இதனை உறுதிப்படுத்திற்று.

அப்படி யார்தான் இந்த அகஸ்தியர் என்ற விளக்கம் வரைவிலக்கணத்துக்கு அப்பாற்பட்டதொன்றாகும். இவர் ஒரு தனி மனிதரல்ல; ஓர் பல்கலைக் கழகம். ஈழத்து மூத்த எழுத்தாளன்; இறுதிவரை எழுத்தை நிறுத்தாத ஓர் இயந்திரம்; இதயங்களைக் கொள்ளை கொண்ட கிடைத்தற்கரிய அன்பர்; இசையில் ஈடுபாடுடைய கலைஞன்; மனதைக் கவரும் கவிஞன்; மாற்றுக் கருத்துடையோரையும் மனம் நோகாது மாற்றும் மனங்கவர் மந்திரவாதி; முற்போக்கு எண்ணங்கொண்ட சிந்தனாவாதி; மாயையில் தமை மறந்து உறங்குவோரை விளிப்படையச் செய்யும் வைத்தியர்; மறந்தும் 'பொய்' கூறா மகான்; இடிதான் வீழ்ந்திடினும் கிஞ்சிற்றும் அசையாத இலட்சியவாதி என்றெல்லாம் கூறிக்கொண்டே செல்லலாம். இப்படிப்பட்ட கிடைத்தற்கரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொக்கிசத்தை இழந்துவிட்ட நாம் இவரது வாழ்க்கையின் இரகசியத்தை அறிய விழைவது இயல்பே.

யாழ்ப்பாணம், ஆனைக்கோட்டை என்ற கிராமத்தில் 29.08.1926ல் சவரி முத்து-அன்னம்மா தம்பதியரின் மூன்றாவது புதல்வனாய்ப் பிறந்த இவருக்கு இரு மூத்த சகோதரர்களும் ஒரு தங்கையும் கூடப்பிறந்த சொத்துக்களாவர். வசதியான குடும்பத்தில் எக்குறையுமின்றி வாழ்ந்திடினும் அவர் தன் 'உள்ளே' ஏதோவொரு குறையுடன் எதையோ தேடினார். அறிவுப் பசியினால் உந்தப்பட்டு மாற்றாரைவிட வேறுபடச் சிந்திக்கலானார். கலையின்பால் நாட்டம் கொண்டார். கவிதை வடிக்க ஆசைகொண்டு கருத்துக்களைச் சேகரித்தார். சாதி, மத, இன பேதமின்றிச் சகலருடனும் பழகத் தொடங்கினார். நந்நூல்களைத் தேடிப் படித்தார். இவ்வேளை நல்லூர் புத்தகசாலையாளரான திரு. எஸ்.இராமசாமி ஐயர் அவர்களின் அறிமுகம் ஏற்படவே அவர் மூலம் தன் அறிவுக் கண்களைத் திறந்துகொண்டார். சமுதாயத்தில் புரையோடும் சகல பிரச்சினை களும் மனிதனை மனிதன் அடிமை கொள்வதனாலேயே என்ற உண்மையை இம்மகான் மூலம் அறிந்துகொண்டார். இதற்குச் சான்று பகரும் பொது வுடமைத் தத்துவ, மார்க்சீய நூல்களைக் கற்றறியப் பழகிக் கொண்டார். இவற்றைக் கற்றுத் தேறிய இளைஞரான திரு. அகஸ்தியர், மக்களின் அறியாமை இருளை நீக்கவெண்ணித் தன் கருத்துக்களைக் கவிதை மூலமும், நாடகங்கள் மூலமும் பரப்பத் தொடங்கி அறிஞர்கள் வரிசையில் தானும் சேர்ந்து கொண்டார். பின் கற்றோரதும், மற்றோரதும் அன்பும், ஆதரவும் கிடைக்கப் பெற்றார். கூடவே, காலஞ்சென்ற திரு. பி.கந்தையா, திரு. வைத்திலிங்கம், திரு. கார்த்திகேசன் போன்றோரின் நட்பும் பெற்றார். மார்க்சீயக் கருத்துக்களினால் உந்தப்பட்டு, மடைதிறந்துவரும் எண்ணக் கிடக்கைகளை வெளியிடப் பேனாவைத் தன் ஆயுதமாக்கிக்கொண்டார். இவரது நோக்கைப் புரிந்திராத பெற்றோர் இவரின் சகல முயற்சிகளுக்கும் முட்டுக்கட்டையாகவிருந்தனர்.

இசையார்வத்தால் ஈர்க்கப்பட்டு, இந்தியா சென்று மிருதங்கக் கலை பயில வேண்டி நின்ற இவராசைக்குப் பெற்றோரர் அணை போட்டனர். இதனால் வீட்டில் குறைவின்றியிருந்த பணவெள்ளத்தில் ஒரு சிறு துளியைத் தன் பெற்றோருக்குத் தெரியாது 'திருடி'த் தன் இசைக்கலை பயிலும் ஆவலைப் பூர்த்தி செய்ய எடுத்த முயற்சி தந்தையாரின் கடின கோபத்தைக் கிழற, அது கையும், காலும் கட்டப்பட்ட நிலையில் அடி வாங்கி, இரத்தம் வடியும் காயங்களுக்கு அரைத்த மிளகாய் பூசி, இனிமேல் வாழ்க்கையில் களவென்பதையே நினைக்காதளவுக்கு இவரைக் கொண்டுவந்துவிட்டது. இருந்தும் தானாகவே முயன்று மிருதங்கக் கலையைப் பயின்று பல இசைக் கச்சேரிகளுக்குப் பக்கவாத்தியம் வாசிக்குமளவுக்குத் தன்னை உயர்த்திக் கொண்டார். நாட்டுக்கூத்துக் கலையில் மிக ஈடுபாடு கொண்டு, 1980ம் ஆண்டு 'வலேந்திரியன்' நாட்டுக்கூத்தில் அரச பாத்திரமேற்று நடித்து, பூந்தான் யோசேப், இன்ஸ்பெக்டர் நாதன் போன்றோரின் விசேட பாராட்டுக்களையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றார். கலையரசு சொர்ணலிங்கம் அவர்கள் தள்ளாத வயதிலும் இவர் நடிப்பைப் பார்க்க விசேடமாக வருகை தந்திருந்தார்.

பெற்றோரின் வற்புறுத்தலினால் தொழில் வாய்ப்புகளில் தன் கவனத்தைத் திருப்ப வேண்டி வந்ததால் இலங்கைப் பொலிஸ் படையில் சேர்ந்தார். மக்களை மனதார நேசிக்கும் இவர், பொலிஸ் படையின் அட்டூழியங்களையும், அராஜகங்களையும், மனிதாபிமானமற்ற செயல்களையும் கண்டு மனம் வெதும்பி அப்பதவியிலிருந்து விலகினார். தொழில் ரீதியாக இலங்கையின் பலபாகங்களிலும் கடமையாற்றியதால் சிங்கள, முஸ்லிம் மக்களின் பரிட்சயம் கிடைத்ததோடு மட்டுமல்லாமல், அவர்களது பிரச்சினைகளையும் அறியும் வாய்ப்பு இவருக்குக் கிட்டியது. சிவில் நிர்வாகத்தில் கடமை புரிய விரும்பிய வருக்கு மீண்டும் இராணுவத்தில் பண்டகசாலைப் பொறுப்பாளராக (Store Keeper) பதவி கிடைத்தது. வேறெவரது தலையீடுமின்றித் தனியே கடமை புரியும் சூழ்நிலை அமைந்ததால் இப்பதவியை விரும்பி ஏற்றுக்கொண்டு, தன் எழுத்துப் பணியைத் தொடர்ந்து, ஆயுதங்கள் குவிந்த பண்டகசாலையை ஒரு கலாசாலையாக்கினார்.

1955ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 5ம் திகதி தன் வாழ்க்கைத் துணைவியாக இளம் நவமணி அக்னேஸ் அவர்களை வரித்துக்கொண்டார். இதுவும் ஒரு புதுமையான திருமணம். இவர் இடதுசாரிக்காரன் என்பதால் இவரது திருமணத்தைக் கோவிலில் நடாத்த ஊர்மக்கள் குருவானவருடன் சேர்ந்து தடைபோட, யாழ். மேற்றிராணியார் அதிவணக்கத்துக்குரிய கியோமார் ஆண்டகை தானே இத் திருமணத்தை நடாத்த முன்வந்ததைக் கண்ட ஊர்மக்களும், குருவானவரும் பணிந்து நின்று திருமணத்தை நடாத்தி வைத்ததைக் குறிப்பிட்டாகவேண்டும்.

இலங்கையில் இடையிடையே தோன்றிய இனக்கலவரங்களிலிருந்து இவர் மயிரிழையில் உயிர் தப்பினார். 1958ம் ஆண்டு இனக்கலவரத்தின்போது ஓர் இரவு பூராகவும் ஒரு கிணற்றுக்குள் மறைந்திருந்து தன் உயிரைப் பாதுகாத்துக் கொண்டார். ஆளும் வர்க்கம் தனது சுகபோக வாழ்க்கையைத் தொடர்ந்தனுபவிக்க இனத்துக்கெதிராக இனத்தைத் தூண்டிவிடும் நயவஞ்ச கத்தைச் சாடினார். மலையக மக்கள், மாறிவரும் அரசாங்கங்களின் விளை யாட்டுப் பொம்மைகளாக்கப்படும் நாசகாரியத்தைக் கண்டு மனம் கொதித்து இவ்வநீதிக்கு எதிராகத் தன் பேனாவை ஆயுதமாக்கிக்கொண்டார். இதனால் சிறிது சிறிதாக விளிப்படைந்த மலையக மக்களின், குறிப்பாகத் தோட்டத் தொழிலாளரின், இதயங்களில் நிரந்தரமாகக் குடிகொண்டார். இறுதியாகக் கண்டி மாநகரில் தனது பணியை நிகழ்த்துங்கால் இவர் செய்த சாதனை களே பெரிதாகும்.

பாட்டாளி மக்களையும், தொழிலாளர்களையும் விழிப்படையச் செய்யும் நோக்குடன் சிறு கவிகளாக, குறுங்கதைகளாக, குறுநாவல்களாக, உரை நடைச் சித்திரங்களாக, கட்டுரைகளாக, விமர்சனங்களாக, நாடகங்களாகத் தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்துக்களை இவர்களண்டை போகச் செய்தார். இவ்வாக்கங்கள் கடல் கடந்து இந்தியாவரை சென்றன. சுதந்திரன் பத்திரிகையில் எழுத ஆரம்பித்தவர் பின்னர் ஈழநாடு, தினகரன், வீரகேசரி, தினபதி, செய்தி, மல்லிகை என்றும் இந்திய முற்போக்குச் சஞ்சிகைகளான தாமரை, எழுத்து, தீபம், கலைமகள், ஜீவா, கண்ணதாசன் போன்றவற்றிலும் இருபத்தினான்கு புனைபெயர்களில் எழுதி வந்தார். இவரது எழுத்துக்களை முப்பத்தியேழு பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் தாங்கி வெளி வந்தன. இதேவேளை இவர் 'இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்க'ச் செயற்குழு உறுப்பினராகவும் அதன் யாழ். கிளைத் தலைவராகவும் பணிபுரிந்தார்.

மார்க்சீயக் கொள்கைகளின் உண்மைகளால் கவரப்பட்டு இடதுசாரி இயக்கங்களின் தொடர்பு கிட்டியதால் இலங்கையின் புகழ்பெற்ற அரசியல் தலைவர்களின் தனிப்பட்ட அன்புக்குப் பாத்திரமானார். தனிப்பட்ட ரீதியிலும், கட்சி ரீதியிலும் இவர்களைச் சந்திக்கும் அரும் வாய்ப்புக்களையும் பெற்றார். டாக்டர் S.A.விக்கிரமசிங்கா, திரு. பீட்டர் கெனமன், திரு. வாசுதேவ நாணயக்கார, திரு. சரத் முத்தெட்டுவேகம, பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா, முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் திரு. A.அமிர்தலிங்கம், திரு. V.யோகேஸ்வரன், திரு. V.தர்மலிங்கம், திரு. V.பொன்னம்பலம் போன்றோரின் விசேட அன்பையும் மதிப்பையும் பெற்றுக்கொண்டார். திரு. பீட்டர் கெனமன் அவர்கள் இவரது இல்லத்துக்கு விஜயம் செய்து அனைவரையும் வியப்பில் ஆழ்த்தினார். வாழ்க்கையின் சகல மட்டங்களிலும் பலதரப்பட்டவர்களுடன் அன்புடன் பழகும் வாய்பினைப் பெற்றுக் கொண்டார். முன்னாள் கண்டி மேற்றிராணியாரான அதிவணக்கத்துக்குரிய டாக்டர் A.போல் பெரேரா ஆண்டகை அவர்களின் அன்பை விசேடமாகப் பெற்றிருந்தார் என்றால் அது மனிதாபிமானமுள்ள எவரையும் இவர் மதிக்கத் தவறியதில்லை என்பதையே காட்டுகின்றது. 1983ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் மிருகவெறி யாடிய இராணுவம் இவரது இல்லத்துள் புகுந்து கொள்ளையடித்ததையும் இவரது சகல நூல்களையும், கையெழுத்துப் பிரதிகளையும் அள்ளிச் சென்று தீயிட்டதையும், இவர் குடும்பத்தினர் மயிரிழையில் உயிர் தப்பியதையும் கேள்விப்பட்ட ஆண்டகையவர்கள் தம் யாழ். விஜயத்தின்போது திரு. அகஸ்தியர் அவர்களின் இருக்குமிடத்தை எவ்வளவோ சிரமங்களுக்கு மத்தியிலும் தேடிப்பிடித்து, நேரில் சென்று தன் அன்பையும், ஆதரவையும், அனுதாபத்தையும் தெரிவித்ததோடு இவ்வநியாயங்களுக்காகத் தான் மன்னிப்புக் கேட்பதாகவும் கூறிச்சென்றார்.

1986ம் ஆண்டு இலங்கையை விட்டு வெளியேறி பிரான்ஸ் நாட்டுக்கு வரவேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டார். அந்நிய நாடு வந்த பின்னர் ஏனோ தானோவென்றிராது எந்நேரமும் தாயகத்தைப் பற்றிய சிந்தனையிலே ஆழ்ந்து விடுவார். பிரான்ஸ் நாட்டிலுள்ள எமது இளைஞர்கள், கலைஞர்கள், அறிஞர்கள், அன்பர்கள், ஆதரவாளர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தினார். கலையார்வமும், எழுத்தாற்றலுமுள்ள இளைஞர்களுடன் சம்பாசித்து அவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களைத் தட்டிக்கொடுத்தார். எமது நாட்டுக்காக உயிரைக் கொடுத்த எம் தியாகிகளை 'எங்கள் பிள்ளைகள்' என்று அடிக்கடி பாசத்துடன் கூறுவார். இதேவேளை தவறு எங்கிருந்தாலும் அதனைச் சுட்டிக்காட்ட என்றுமே அவர் தயங்கியதில்லை. எமது நாட்டில் நடக்கும் அடக்குமுறைகளையும், அராஜகங்களையும் அவ்வப்போது வெளிப்படையாகவே கண்டித்து வந்தார்.

இராணுவத்திடம் இழந்த தேடற்கரிய தனது நூல்களையும், கைப்பிரதிகளையும், ஆக்கங்களையும் ஈடுசெய்யும் நோக்குடன் மீண்டும் அவற்றைப் படைக்கும் பயங்கரப் பணியில் இறங்கி, இரவு பகலென்று பாராது எழுதிக் கொண்டே வந்தார். இவரது அருமைத் துணைவியார் இவர்தம் முயற்சிக்கு ஆக்கமும், ஊக்கமுமளிக்க, பிள்ளைகள் தம்மால் இயன்ற பணிகளையும் செய்து இவரது புனித பணியில் பங்கேற்றனர். பிரான்சிலிருந்துகொண்டே இந்தியாவில் தனது நூல்களை வெளியிடும் சாதனையையும் படைத்தார். இவரது 'கலை இலக்கியமும் வர்க்க நிலைப்பாடும்' என்ற நூல் பாரிசில் ரஜனி பதிப்பகத்தால் 1991ம் ஆண்டு வெளிவந்ததைக் குறிப்பிடாமலிருக்க முடியாது.

இற்றைக்கு நாவல், குறுநாவல், சிறுகதைத் தொகுப்பு, கட்டுரை, குறுநாவல் தொகுப்பு, உணர்வூற்றுருவகச் சித்திரம், விமர்சனக் கட்டுரை என்று பதினைந்துக்கும் மேற்பட்ட திரு. அகஸ்தியரின் நூல்கள் வெளிவந்துள்ளன. இவற்றுள் 'மண்ணில் தெரியுதொரு தோற்றம்', 'நாட்டுக்கூத்துக் கலைஞர் வரலாறு' என்ற இரு நூல்களும் இலங்கை அரசின் சாகித்திய மண்டலப் பரிசல்களைப் பெற்றன. இப்பரிசிலை இவர் ஏற்காது நிராகரித்தது எம்மினத்தின் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட இராணுவ வெறியாட்டத்தைக் கண்டித்தும், சிறைகளில் விசாரணையின்றி அடைக்கப்பட்ட எம்மிளைஞர்களை விடுதலை செய்யக் கோரியும், தமிழ்–சிங்களக் கலைஞர்கள் ஒரே விதமாகக் கௌரவிக்கப் படவேண்டுமென்றும் கோரியே. 'மேய்ப்பர்கள்' என்ற சிறுகதைத் தொகுப்பு இலங்கை, மற்றும் தமிழ்நாடு அரசுகளின் விசேட பரிசில்களைப் பெற்றன. இவருக்கு 'இலக்கிய வித்தகர்' என்ற பட்டமும் இலங்கை அரசினால் வழங்கப்பட்டது. திரு. அகஸ்தியரின் நூல்கள் பல சிங்களம், மலையாளம், மற்றும் ரஷ்ய மொழிகளிலும் மொழிபெயர்க்கப் பட்டுள்ளன. சில நூல்கள் ஆங்கிலம், பிரெஞ்சு மொழிகளில் மொழிபெயர்ப்பதற்கான வேலைகளும் நடைபெறவுள்ளன.

இவரது ஐரோப்பிய வருகையின்பின், பல ஐரோப்பிய நாடுகளில் இவர்தம் ஆக்கங்கள் அவ்வப்போது வெளிவந்ததைப் பட்டியல் போட்டுக் காட்டுவது சாலப் பொருந்தும்:

✷ 1991ம் ஆண்டு செப்டம்பர் மாதம் பாரிசில் இவரது 'கலை இலக்கியமும் வர்க்க நிலைப்பாடும்' என்ற நூல் வெளியானது.

✷ 1991ம் ஆண்டு டிசம்பர் மாதம் ஜேர்மனியின் பேர்லின் நகரில் நடைபெற்ற கலை–இலக்கிய மகாநாட்டில் இவரது நூல்களை விமர்சிக்கவும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆய்வு செய்யவும் தனி ஒரு நாளே ஒதுக்கப்பட்டதென்றால் இவரது எழுத்துக்களின் 'கனாகனம்' எப்படியென்று அனைவரும் ஊகித்தறியலாம்.

✷ 1992ம் ஆண்டு பாரிசில் நடைபெற்ற பாரதிதாசன் நூற்றாண்டு விழாவில் தமிழ்நாடு நிதியமைச்சர் நாவலர் திரு. நெடுஞ்செழியன் அவர்கள் திரு. அகஸ்தியரின் இலக்கியப் பணியைப் பாராட்டிப் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்.

✷ 1993ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 'எரிநெருப்பில் இடைபாதையில்லை' என்ற இவரது நாவல் பாரிசில் 'பாரிஸ் கலை இலக்கிய ஆர்வலர்' ஆதரவில் வெளியிட்டு வைக்கப்பட்டது.

✷ 1994ம் ஆண்டு சுவிஸ் நாட்டு லூசான் நகரில் இவரது நூலான 'எரி நெருப்பில் இடைபாதையில்லை' வெளியிடப்பட்டு மிகச் சிறந்த முறையில் இவர் கௌரவிக்கப்பட்டார். இங்கு இவர் பங்கேற்ற சிறுவர் சிறப்பு நிகழ்ச்சி அனைவர் மனத்திலும் நிலைத்திருக்கும்.

✷ மீண்டும் அதேயாண்டு அக்டோபரில் சுவிஸ் நாட்டின் சூரிச் நகரில் இவரது 50 வருட எழுத்துப் பணியைப் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டதுடன், 'நரகத்திலிருந்து..', 'மகாகனம்பொருந்திய..', 'அகஸ்தியர் பதிவுகள்' என்ற மூன்று நூல்களும் வெளியிடப்பட்டன. இவர் சுகயீனம் காரணமாக இவரது இளைய மருமகனான திரு. M.P. ராஜதாசனை இவர் பிரதிநிதியாக அனுப்பிவைத்தார்.

✷ 1994ம் ஆண்டு டிசம்பர் மாதம் இதே மூன்று நூல்களும் பாரிசில் மிகவும் சிறப்பான முறையில் வெளியீடு செய்யப்பட்டன.

✷ 1995ம் ஆண்டு மார்ச் மாதம் லண்டனில் மேற்கூறப்பட்ட மூன்று நூல்களும் வெளியீட்டு விழாவைக் கண்டன.

✷ 1995ம் ஆண்டு ஜூன் மாதம் பாரிசில் 'எவளுக்கும் தாயாக' என்ற சிறுகதைத் தொகுப்பு வெளியீட்டு விழாக் கண்டது.

✷ கடைசியாக 1995ம் ஆண்டு செப்டம்பர் மாதம் ஜேர்மனியின் எசன் நகரில் 'தேனருவி' பத்திரிகையால் நடாத்தப்பட்ட கலை, இலக்கிய, இசை விழாவில் மீண்டும் இவரது 'எவளுக்கும் தாயாக' என்ற சிறுகதைத் தொகுப்பு நூல் வெளியிடப்பட்டு, இவரது 50 ஆண்டு இலக்கியப் பணியினைப் பாராட்டிப் பொன்னாடை வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். ஆனால் துரதிர்ஷ்டவசமாக இவர் நோய்வாய்ப்பட்டிருந்த காரணத்தினால் இவ்விழாவில் நேரில் கலந்து கொள்ளாது தன் மூத்த மருமகனான திரு. S.B.ஜோகரட்னம் அவர்களை விழாவுக்குத் தனது சார்பில் அனுப்பிவைத்தார்.

இப்படி இடையறாது எழுதிக்கொண்டிருந்த மேதாவியைக் கடந்த ஐந்து வருடங்களாகக் கொடிய நோய் வாட்டிவந்தது. நோயின் வேகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடக்கூட இவர் எழுத்தின் வேகமுமோ தணிந்தபாடில்லை. தன் மரணப் படுக்கையிலும் நடுங்கும் கைகளால் எழுதிக்கொண்டிருக்கும் காட்சியைக் கண்டோர் மிகச் சிலரே. தன்னைப் பார்வையிட ஆட்கள் வரும் அரவம் கேட்டதுமே பேனாவும் காகிதங்களும் தலையணையின் கீழ் தலைமறை வாகும் தாற்பரியம்தான் என்னே!

தனது இறுதி நெருங்குவதை நினைத்தோ என்னவோ, கடந்த சில வாரங்களின் முன்னர் தனது எழுத்துலகத் தொடர்புகளைத் தொடரும்படி தன் மூத்த செல்வத்தைக் கேட்டபோது எவருமே இவ்வளவு சீக்கிரம் இவரைப் பிரிவோமென்று கனவுகூடக் கண்டதில்லை. மறைவதற்கு இரு தினங்களுக்கு முன் தனது மனைவி, மக்களை வீணாக வந்து அலையவேண்டாமென்றும் தான் குணமாகி வருவதாகவும் இரண்டு நாட்களில் வீடு திரும்பி விடுவ தாகவும் தொலைபேசியில் கூறினார். வழமைபோல அவர் வீடு திரும்பும் நாளை எதிர்பார்த்திருந்தவர்களுக்கு வந்தது பேரிடி. டிசம்பர் மாதம் 8ம் திகதி. கொடுகொடுக்கும் குளிர் ஒருபுறம். நாட்டையே ஸ்தம்பிக்க வைக்கும் வேலை நிறுத்தத்தால் பிரயாண வசதியற்ற கொடூரமான சூழ்நிலை மறுபுறம். ஆனால் தொலைபேசியோ கணீரென ஒலிக்கத் தவறவில்லை: "உங்கள் அப்பாவின் நிலைமை மோசமாகியுள்ளது. உடனடியாக வந்து பார்க்கவும்..." என்றது. முடிந்தவரை கிடைத்த வாகன வசதிகளுடன் வைத்தியசாலையை நோக்கி அனைவரும் விரைந்தனர். ஓடோடி வருமுன் அவர் எங்களைக் கவலைப் படுத்தக் கூடாதென்று தான் முந்தியே தனது பயணத்தை ஆரம்பித்துவிட்டார்.

தம் பயணத்தை மட்டும் தனியாகத் தொடர்ந்தாரே தவிர, அவர் நம்மைத் தனியாக விட்டுவிட்டுச் செல்லவில்லை. எண்ணற்ற நூல்களையும், எழுத்தோவியங்களையும் எமக்கு அன்பளித்து, எம் அறிவுப் பசிக்குணவாக வும், வழிகாட்டிகளாகவும், அடிச்சுவடுகளாகவும் விட்டுச் சென்றுள்ளார்.

*"என் கலை இலக்கியங்கள் எப்பேர்ப்பட்டவை என்று*
*நான் கூறமாட்டேன்; மக்களே அதனைக் கூறுவார்கள்"*

என்ற அவரது கூற்றுப்படி காலமும் மக்களும் இப் புதையல்களிலிருந்து பயனடையப்போவது நிச்சயம். ஆண்டாண்டு தோறும் டிசம்பர் எட்டாம் நாள் தமிழ் கூறும் நல்லுலகின் புனிதமான நாளாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என் உயிரிலும் மேலான உயிரே!



இல்லறத்துணையுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் திருமணமே ஓர் புரட்சித்திருமணமாகவே நிகழ்ந்தது. எம் நாட்டில் அவர் ஒரு கொம்யூனிஸ்டுக்காரன் என்று கூறி, அவருக்கு என்னென்ன கொடுமைகள் செய்யவேணுமோ அவ்வளவு கொடுமைகளும் உயர்மக்கள் செய்தார்கள். அவர் தம் இலட்சியத்தில் ஒரு அணுவேனும் விலகவில்லை.

நானும் அவர் கரம் பிடித்த அன்று தொட்டு இன்றுவரைக்கும் அவருடன் இணைந்து அவருடைய விருப்பத்தையும், ஆசையையும் எனது கடைசி மூச்சு விடும் வரையும் செய்து வைப்பது எனது கடமையும் ஆசையும்.

40 வருஷமாக எங்கள் வாழ்க்கை புனிதமாக மலர்ந்தது. அவர் என்னை விட்டுப் பிரியவில்லை; அவர் என்னுடன் இருக்கிறார். அவர் என் தெய்வம் அவரை வணங்குகிறேன்.

அவர் நோய் வாய்ப்பட்டு இருந்த வேளையிலும் தனது இலக்கியப்பணியையும், மக்களின் நேசிப்பையும் அவர் சிறிதேனும் விட்டு விலகவில்லை. ஒருவாரம்தான் அவருடைய கரம் ஓய்ந்தது. அவர் தமது மனைவி, மக்களுடன் மட்டும் நிற்கவில்லை. சகல மக்களையும் நேசித்தவர், அவர்களின் அன்பைப் பெற்றவர். அவருக்குத் துணைவியாக இருந்ததே எனக்கோர் பாக்கியம். அவர் எல்லா எதிரிகளையும் தனது அன்பாலும் பண்பாலும் அமைதியாலும் வென்றவர்.

அவர் சமாதானத்துக்காக எந்த நேரமும் பாடுபட்டவர். கடைசியில் அவர் நெஞ்சில் ஒரு பாரம் இருந்து விட்டது. அந்தப் பாரம் என் நெஞ்சிலும் உறைந்து விட்டது.

துணைவி
நவமணி அகஸ்தியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எங்கள் பப்பா...

கலைக்குடும்பத்தில் பிறந்து, கலைமகளைத் திகழ்ந்து, கற்பனையின் ஊற்றெடுப்பால், முன் வைத்த கொள்கையின் புரட்சிகரத் தத்துவங்களால் கைசோராது கடைசி மூச்சுவரை எழுதிக் கொண்டிருந்த எமது ஆசைப்பப்பா!

'எழுதும் வரைதான் எழுத்து எனக்குச் சொந்தம் — எழுதிய பின் அவை மக்களுக்குச் சொந்தம்' என்ற மந்திரத்தை இம்மேதினியில் எடுத்தோம்பிய எம்மருமைப் பப்பாவே! இங்கு 'எல்லா மக்களுமே என் சொந்தப் பிள்ளைகள் தான்' என்று அடிக்கடி கூறுவீர்களே பப்பா.

நாமெல்லாம் பரிதவித்து நிற்கும் வேளை தீயுடன் உறவு கொண்டீர்களா பப்பா? இல்லை... இல்லை... எங்கள் ஒவ்வொருவர் இதயங்களிலும் அன்புத் தீயாயல்லவா எரிந்துகொண்டிருக்கிறீர்கள். உங்கள் இலக்கியங்கள் உயிர்த்துவம் பெற்று எங்களை என்றும் வழிகாட்டும்.

புதுமையான என் தந்தையின் இழப்பை என்னால் ஏற்கவே முடியவில்லை. சுவையாகக் கதைகளைக் கூறும் பாங்கு, அறிவு, ஆற்றல், சுறுசுறுப்பு, சங்கீதம், பாட்டு, நடிப்பு, இரசனை, உண்மை, நேர்மை, வாழ்க்கையினூடாகக் கூறிய தத்துவங்கள், அரசியல் தலைவர்களுடன் சம்பாஷிக்கும் விதம், அணுகு முறைகள், வீட்டில் இலக்கிய நண்பர்களுடன் உறக்கமின்றித் தர்க்கிக்கும் பாங்கு, எதையும் உரிய நேரத்தில் செய்யும் ஒழுங்கு முறைகள், சிறுவர்களுடன் அவர்களின் நிலைக்குமாறி இரசிக்கும் இனிய தன்மை, இயற்கையை நேசிக்கும் இதய சுபாவம், மற்றவர்கள் மனதைப் புண்படுத்தாது எதிர்க்கருத்துக்களைக் கூறும் விதம், பாமர மக்களுடன் நட்புடன் சம்பாஷிக்கும் போக்கு, உதவிகள் செய்து அடையும் பூரிப்பு, கடமையுணர்வு, இளைஞர்கள், யுவதிகள், வயது வந்தவர்களுடன் காட்டும் தோழமை ... இன்னும் ஆயிரம் என் அருமைப் பப்பாவே சுடர்போல் வந்துகொண்டிருக்கிறீர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருமைத் தெய்வமே பப்பா!

கணவன் - மனைவி வாழ்க்கையை நடைமுறையில் நடந்து காட்டிய வழிகாட்டியே!

கண்ணிருந்தும் குருடாக இருந்துவிட்டோம். உங்கள் கண்களை மூடியா எம் கண்களைத் திறக்கவேண்டும். இருந்தும் திறவாத சில கண்களையும், மாண்ட மற்ற மனிதச் சடலங்களையும் நினைத்து, நினைத்து வெந்து உங்கள் உயிரைப் பிரிந்தீர்களா?

நீங்கள் எமக்களித்த வாக்குறுதியை நிச்சயம் நிறைவேற்றி வைப்போம், எம்மாருயிர்த் தந்தையே! எவ்விடர் வரினும் யாரெது கூறினும் நீங்கள் கேட்ட அந்தத் 'திவ்விய கடமை'களைச் செய்தே தீருவோம்.

உங்கள் இழப்பின் அதிர்ச்சியிலிருந்து நாம் இன்னும் விடுபடவில்லை. உங்கள் 'கண்மணிகள்' என எம்மை வளர்த்தீர்களே பப்பா!.... எமது கண்கள் கலங்கினால் உங்கள் இதயம் தாங்காதே...!. சிறுவர்களாய் இருந்தவேளை தொட்டதற்கெல்லாம் அழும் எம்மைப் பார்த்து....

'வெம்புவாள் விழுவாள் பொய்யே'
வேல் விழுந் தழுவாள் பொய்யே!
தம்பலம் தின்பாள் பொய்யே!
சாகிறேன் என்பாள் பொய்யே!
அம்பிலும் கொடிய கண்ணாள்
ஆயிரம் சிந்தையாளை
நம்பின பேர்களெல்லாம்
நாயிலும் கடையராவர்' என வம்புகள் கூறிச்

சிரிக்க வைப்பது இன்றும் நினைவிருக்கிறது.

கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில, கலைவிழாவில் அரச குமாரத்தியாக நான் நடித்தவேளை, விசேட அழைப்பிதழின் பேரில் வருகை தந்து என்னை ஆரத்தழுவி வாழ்த்தியது மட்டுமன்றி, மற்றும் ஆசிரியர்களையும் நெஞ்சார வாழ்த்தி 'நுட்பமான ரசிகன்' என எல்லோரையும் ஆச்சரியத்திற்குள்ளாக்கினீர்களே தந்தையே! ஆனந்த அக்களிப்பு மேலோங்க 'திருமணக் கோலத்தில்' பிள்ளையைப் பார்த்துவிட்டேன் என்று அம்மாவுக்குக் கூறியது இன்றும் என் மனக்கண்ணில் தெரிகிறது; இன்னும் ஆயிரம்... ஆயிரம் இப்படி இனிய நினைவுகளேதான்... ஆனா...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எட்டாம் திகதியினை ஜீரணிக்க முடியவில்லை
எம்மிதயக் குமுறல்களை எடுத்துரைக்க வார்த்தையில்லை
கொடிய நோய் வந்ததென்று இறுதி வரை தெரியவில்லை
கொடுமையாய் மறைத்ததே கொடிய மனம் நம்புதில்லை.

மக்கள் எழுத்தாளன் நீங்கள் மரணிப்பதில்லையே! இல்லவே இல்லை...

தமிழ் இலக்கிய உலகமே,

'செங்கோலை மிஞ்சியது உங்கள் எழுதுகோல்' என வர்ணித்தபின், ஈழத்தமிழ் இலக்கிய உலகம் பெருமைப்பட இனி வேறு என்ன இருக்கிறது பப்பா!

நீங்கள் மரணத்தை வென்ற மாமனிதனே தான், உங்கள் முற்போக்குக் கருத்தியல்கள் உயிர்த்துவம் பெறும். அழியாத உங்கள் நாமம் என்றும் எங்களுடன் வாழும்.

- நவஜோதி ஜோகரட்னம்

நவஜோதி ஜோகரட்ணம்.



தன் ஒரே மருமகளுடன் எஸ்.ஏ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனிய எங்கள் பப்பாவே...

உங்கள் எழுதியகரங்கள் நின்றதென்றசெய்திகேட்டு
அதிர்ச்சியடைந்தோம்.
உங்கள் கரங்களுக்கு இறுதியான
ஓய்வுகொடுத்துச்சென்றுவிட்டீர்களே!
இதற்காகத்தானோ எங்கள் மழலைச்செல்வங்களைப்பார்பபதற்காக,
உடல் நிலை குன்றியவேளையிலும் மனத்தைரியத்துடன்
பாசத்தைப்பகிர்ந்துகொள்ள லண்டனுக்கு ஓடோடி வந்தீர்கள்?
நாங்கள் ஒருபோதும் எண்ணவில்லை இதுதான் உங்கள் கடைசி
வருகையாக இருக்குமென்று.
என் தாய்தந்தையர் அருகிலில்லாத குறையை சமனாக இருந்து
தீர்த்து வைத்தீர்களே!
என்னை ஓர் மருமகளாக ஒருபோதும் நீங்கள் கருதியதில்லையே.
உங்கள் பிள்ளைகளில் ஒரு செல்வமாகவே என்னை நடத்தினீர்கள்.
தத்துவம் சொன்னதில் குருவாகவும் பாசத்தைஊட்டியதில்
தந்தையாகவும் இருந்தீர்களே!
அம்மாவுக்கு உங்கள் கலை இலக்கியப்பொக்கிசத்தைத்தான்
விட்டுச்சென்றீர்களா?
இலட்சியவேட்கையோடு கொண்டகொள்கையையும் வென்று
சென்றவரே!
எமக்குத்தத்துவத்தை தத்துரூபமாக எடுத்துரைத்த வித்தகரே!
மனதில் உள்ளதை நேரிய பார்வையுடன்
வெளிப்படையாகச்சொல்பவரே!
எல்லோரிடத்திலும் நன்மதிப்பையும் அன்பையும் சுமந்து
சென்றீர்களே!

எந்நேரமும் கவலையைமறந்து நகைச்சுவை
விடுத்துச்சிரிக்கவைப்பீர்களே!
சந்தோஷமாக இருங்கள். பிள்ளைகள் கவனம். என்று
அடிக்கடிகூறுவீர்களே!
ஐயோ! இனி இந்த வார்த்தைகளை யாரிடம் கேட்போம்?

எங்கள் எல்லோருக்கும் ஒரு பெரிய ஆலமரமாக இருந்து
காவல்காத்து வந்தீர்கள். உங்கள் நிழலில் நாங்கள் என்றும் வாழ
எங்களை ஆசீர்வதியுங்கள் பப்பா.
நீங்கள் மரணிக்கவில்லை. எங்கள் எல்லோர் இதயங்களிலும்
மலர்ந்து கொண்டிருக்கிறீர்கள்.

அன்பு மருமகள்.
**சுஜீ நவஜீவா.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# MON SEUL ET UNIQUE GRAND-PÈRE

Mon grand-père était le meilleur, il pensait plus qu'à sa famille qu'à son travail. Quelquefois, pour écrire ses livres, il cherchait ses idées dans ses rêves, mais plus souvent, il les cherchait dans la société.

Je n'ai jamais vu quelqu'un à avoir aussi tant de respect pour un livre. L'écriture pour lui, c'était un moyen de communication pour parler dans notre monde et le monde de la littérature. Quand je l'ai vu mort, il avait un stylo, alors, je crois et je croirai que la chose qui symbolisera mon grand-père sera une plume, parce que la plume est l'ancêtre du stylo. J'ai choisi la plume comme emblème aussi parce que mon grand père était un homme moderne tout en gardant ses coutumes. Je sais qu'il a sacrifié sa vie pour le bonheur des autres. Je ne saurai jamais le remercier si je deviendrai un homme important et ça sera grâce à lui parce qu'avant, mon grand-père me téléphonait tous les jours à 18h15-18h20 et me disait toujours de bien travailler et aujourd'hui, ça me manque beaucoup. Aujourd'hui, je suis conseiller municipal et c'est grâce à lui.

Même si mon grand-père est mort, il vivra toujours. il sera dans notre coeur car on ne l'oubliera jamais.

Son petit-fils, Yannickraj

(YANNIKRAJ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது-ஒரே ஒரு தாத்தா

என் தாத்தா உயர்ந்தவர். இவர் தன் வேலையிலும் பார்க்க தன் குடும்பத்தையே அதிகம் நேசித்தவர். இவர் சிலவேளைகளில் தன் நூல்களை எழுதுவதற்கு கருத்துக்களை தன் கனவுகளில் தேடுவார். ஆனால் இவர் பெரும்பாலும் அவற்றை சமுதாயத்தில் தேடிவருவார். இவர்போல் புத்தகத்தில் மதிப்பு வைத்திருந்த ஒருவரைநான் ஒருபோதும் கண்டதில்லை. எமது உலகத்துடனும் இலக்கிய உலகத்துடனும் பேசுவதற்கு எழுத்து இவருக்கு ஒரு தொடர்புஊடகமாக இருந்தது. இவர் இறந்தபோது இவர் கையில் ஒருபேனா இருந்தது. ஒருதூவிதான் என்தாத்தாவை அடையாளம் காட்டக்கூடியது என நம்புகிறேன். ஏனெனில் தூவிதான் பேனாவின் மூதாதையர். தன்பண்பாடுகளை பேணிக்கொண்டு வாழும் நவீனமனிதனாக வாழ்ந்ததினால் என்தாத்தாவைக் காட்டும் அடையாளச்சின்னமாகத் தூவியைத்தெரிவு செய்திருக்கிறேன். அவர் தன் வாழ்வை மற்றவர்களின் சந்தோசத்திற்காகச் செலவு செய்தவர் என்பது எனக்குத்தெரியும்.



நான் ஒரு பெரியஆளாக வரவேண்டும் என்பதில் அவர்பெரிதும் அக்கறையாக இருந்தார். தினமும் 18.15க்கும் 18.20க்கும் இடையில் போன்செய்து நன்றாகப் படிக்கவேண்டும் என்று சொல்வார். இவ் அழைப்பை இன்றுநான் இழந்திருப்பது மிக்பெரிய இழப்பாகும். இவரால்தான் நான் இன்று முனிசிப்பல் ஆலோசனைசபையில் இருக்கிறேன். இவருக்கு எப்படி நன்றிசொல்வதென்று எனக்குத்தெரியவில்லை.

எனது தாத்தா இறந்துபோனாலும், அவர் எமது நெஞ்சங்களில் வாழ்வார். ஏனெனில் நாம் அவரை ஒருபோதும் மறவோம்.

அவர் பேரன்.

**ஜனிக்ராஜ்.** (வயது9)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறைந்தும் மாமனிதனாய் நடமாடும் என் தந்தையே!

- அகஸ்தியர் நவஜீவா

மார்க்சிச அழகியலால் மனித நேயம் பெற்றவரே
மானிட தரிசனங்கள் பற்பல செய்து வாழ்ந்தவரே
மனிதகுல அவலங்களைக் குமுறல்களாய் வெளிக்கொணர்ந்தவரே
நூலுருவில் இவற்றையெல்லாம் படைத்துப் புகழ் பெற்றவரே
இலக்கிய உலகில் வித்தகரெனப் போற்றப் பட்டவரே
சாகித்தியத்தின் மண்டலமதைப் புகழுடையச் செய்தவரே.

ஒடுக்கப்பட்ட, அடக்கப்பட்ட, சுரண்டப்பட்ட மக்களுக்காய்
சிவப்புத் தீயாய்ப் போர்முனையில் 'எழுத்துச் சுதந்திரம்' என்ற
மாயவலைதனைக் கிழித்து, தம் கரம் பிடித்த
அதிசக்திவாய்ந்த 'பேனா'வெனும் ஆயுதத்தைத் தாங்கி
உலகளாவிய வட்டத்தில் ஐந்து தசாப்தமாய்
கொண்ட கொள்கையும் இலட்சிய வேட்கையும் மாறாது நிற்பவரே.

கலை, இலக்கிய மேதைத் தனத்தால் பிதா, மாதாவென்ற
தரிசனங்கள் உலகில் பொருள்படும் முதன்மையான
தெய்வங்கள் என்றும், இனிய பேரக் குழந்தைகளைக்
கொஞ்சுமொழி பேசி கொஞ்சுமழகு நெஞ்சினுள் விஞ்சிடும்
கலை இலக்கியச் சோலையினுள் புகுந்து குழந்தைகளாக
மழலை கூறி மகிழ்வீர்களே
இனியதோர் கம்பீரக் குரலில் என் அன்னையுடன் இணைந்து
'ஏழு ஜென்மம் எடுத்தும் உனை நான் காப்பேன்' என்றவுங்கள் கானமும்
உங்கள் கைகளால் மிருதங்கம் வாசிக்க, பேரன் 'ஜெனிக்'
வயலினிசைத்த கானங்களும் நெஞ்சினுள் இன்னிசைக் கீதங்களே.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் அன்னை தந்தைக்கு இறுதிவரை முத்தம் கொடுத்தீர்கள்
உங்கள் அன்னைக்குச் சமர்ப்பணமாய் வெளியிட்ட **இருளினுள்ளே**
குறுநாவல் உங்கள் கைக்கு வந்து சிலநாட்களாகவில்லை
நெஞ்சினுள் பொதுக்கி அன்னைக்கே முத்தம் சொரிந்தால்போல்
மகிழ்ந்திருந்த நீங்கள், மருத்துவ மனையிலிருந்தே
'நாளை மறுதினம் வந்திடுவேன் வீணாக வந்தலையத் தேவையிலை'யென
அம்மாவுக்கு அனுப்பிய செய்தியின் மர்மம்தான் என்னே?

சமூகக் கொடுமைகளை வேரோடு அறுக்க முனைந்து
சுத்த வீரமிக்க போராளியாய் 'பேனா'வெனும் ஆயுதம் தாங்கி
'கெட்டது அழிந்தாலே நல்லது தோன்று'மென்றே நினைத்து
'எரிநெருப்பில் இடைபாதையில்லை' என்ற நாவல்தனைத் தந்த
தந்தைதனை மறப்போர் யாருமிம் மேதினியிலுண்டாமோ
எரிநெருப்பில் இடைபாதையில்லாது மாபெரும் இலக்கியப்
பொக்கிசங்களைத் தந்துவிட்டு செந்தீயினுள் சென்றது
எம் நெஞ்சிலுள்ள கதவுகளை அடைத்திடவோ!

உங்கள் இலட்சிய வெற்றியால் மறைந்தும் மாமனிதனாய்
நடமாடும் தந்தையே, மரணத்தைத் தோற்கடித்து
மானிடங்களைத் தரிசிப்பவரே
உங்கள் இலட்சியங்களை எங்கள் நெஞ்சோடு
என்றென்றும் சுமந்திடுவோம்.

கலை இலக்கியத்துக்கு மெருகூட்டுபவன்
என்றுமே மரணிப்பதில்லை.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம்மில் வாழும் என் ஆசைப்பாப்பா..



அன்று வெள்ளிக்கிழமை, மார்கழி எட்டு.

வழமையாக வேலைக்கு போகவேண்டிய நான், அதிகாலை ஐந்து மணியிலிருந்து உச்சி, நெஞ்சு வலி. ஒரே குமட்டல்.

என் உதிரத்தில் ஏற்பட்ட மாற்றம் எனக்குப் புரியவில்லை.

வேலை செய்யும் இடத்திற்கு எட்டரை மணியளவில் என்னிலை கூறி, வேலைக்கு வரமுடியாத நிலையைத் தெரிவித்து மீண்டும் படுக்கையில் இருந்தேன்.

ஒன்பதரை மணியிருக்கும் தொலைபேசியின் அலறல்...

துணைவர் எடுத்தார்.

"உங்களுடன் கதைக்கவாம்"

வேலைத்தலத்திலிருந்து எடுக்கிறார்கள் என நினைத்து மெதுவாக வந்தேன்.

பெண்மணி ஒருவர் மெல்லிய குரலில்...

வைத்தியசாலையிலிருந்து கதைப்பதாகக் கூறி, தன்னை அறிமுகப்படுத்தி பப்பாவின் நிலை மோசமாக இருப்பதாகவும், எவ்வளவு சீக்கிரமாக வரமுடியுமோ அவ்வளவு விரைவில் வரும்படியும் கூறினர்.

தொலைபேசியை எறிந்துவிட்டு

ஐயோ, என் பப்பாவிற்கு என்னாயிற்று, என்று நிலைகுலைந்து நடைப்பிணமாக ஓடினேன்.

காலத்தின் கொடுமை

வேலை நிறுத்த கெடுபிடியினால் போக்குவரத்து வசதியில்லை. போவதற்கு வழிதெரியாமல் வீட்டிலிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓடினேன். வீதியே தெரியாத நெரிசலான வாகனங்கள். இடையில் நின்ற கார்ச் சாரதியிடம் என்நிலை கூற, என் பரிதாபநிலை கண்டு ஏற்றிய வாகனம் நகர ஆரம்பித்தது. வாகனம் உரை வழியின்றி அரக்கியது. பொறுமையிழந்த நான், சிறிது தூரத்தின் பின் இறங்கி ஓட ஆரம்பித்தேன்.

பத்தேழுக்கால் மணியளவில் வைத்தியசாலையை அடைந்தேன்.

என் பப்பாவை பார்க்கும் ஆவலில் சாலையின் மணியை அடித்தேன்.

தாதிமார்கள் கதவைத்திறந்ததும் என்னை அறிமுகப்படுத்தி துடிக்கின்ற நெஞ்சை அழுத்திப்பிடித்து பரிதவித்த கோலத்தில் பப்பா எப்படி இருக்கிறா என்றேன்.

எல்லோரும் ஆளை ஆள் மாறிப் பார்க்கிறார்கள்.

பலத்த மௌனம்....

அதன் பின் ஒருவர்

அவர்.....

எனக்கு எல்லாமே சூன்யமாகிவிட்டது.

சிதரம் நழுவி துடிதுடித்து கதறி அழுதேன். அங்கிருந்தோர்களின் ஆறுதல்கள், தேறுதல்கள் எல்லாம் என்னுயிர்க்கு உயிர் தந்த தெய்வத்தை இழந்தபின் ஆர்த்தப்படுத்தப்படவில்லை.

மயக்கநிலையிலிருந்து விடுபட்ட என்னை அமைதிப்படுத்தி அழைத்துச் சென்றார்கள். நிரந்தர துயிலிலிருந்த என் பப்பாவின் மேல் விழுந்து கதறினேன். இந்தக் கொடூரத்திலிருந்து மீள மார்க்கமேயில்லை.

என் நிலையே தெரியவில்லை.

என் காதுகள், கண்களையே நம்பமுடியவில்லை.

ஒரு மணி நேரத்திற்குள் அக்கா, அண்ணா, துணைவர், பிள்ளைகள், உருக்குலைந்த நாதியற்ற நடைப்பிணமாக அம்மா. நெஞ்சகுத்தத்தில் அவரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்தம் ........

இரு நாட்களில் பிரத்தியேக சிகிச்சைக்கு போய்த் திரும்பி வந்து விடுவேன் அம்மா, என்றீரே. இப்படி இரு விழிகளும் மூடி நிரந்தர துயில் கொண்டதேன்.

குடும்பத்து குலவிளக்கே, வாழ்க்கையை வாழக் கற்றுக்கொடுத்த வழிகாட்டியே, எம்மை யெல்லாம் பெற்று, வளர்த்து, ஆளாக்கி, அறிவுச் செல்வத்தை ஊட்டி, அன்பு கலந்த ஆலோசனைகள் வழங்கி, பாசமழை பொழிந்த என் ஆசைப் பப்பா ......

உங்கள் அர்த்தமுள்ள புனை பெயர்களையே எம்மவர்க்கு பெயராகச் சூட்டி, எதிர்கால நிகழ்வுகளை நிதானமாகக் கூறும் தீக்ஷண்யன் நாமம் பூண்ட உங்கள் புனைபெயரையல்லவா, என் பைங்கிளியாம் உங்கள் செல்வப்பேத்திக்கு மனசிருந்து தீக்ஷா என்று சூட்டினீர்கள்.

எதைப் பார்த்தாலும் என் பப்பாவின் நிழல் தானே தெரிகின்றது. வீடெங்கும் உங்கள் எதிரொலி கலந்த நாதம் தானே ரீங்காரமிடுகின்றது.

நீண்டகாலம் எல்லோரும் சந்தோஷமாக ஒற்றுமையுடன் வாழவேண்டும் என்பீர்களே.

கொடுமையின் மேல் கொடுமை.

என் உயிர் தந்தாய் உங்கள் திருமுகம் பாராமல் எப்படி இருப்பேன். இல்லை ... இல்லை .. என்னுயிரோடு கலந்த பப்பா, நீங்கள் எங்கள் ஒவ்வொருவரிலும் இருக்கிறீர்கள்.

குடும்பத்திற்காக மட்டும் வாழவில்லை. உலக மக்கள், நாட்டு மக்களை நேசித்த இலக்கியவாதியல்லவா; உங்கள் உதிரத்தால் எழுதப்பட்ட எழுத்துக்கள் எங்களுக்கு வழிகாட்டும்.

பொதுவுடமை கொள்கையையும், அதன் தத்துவம், அதன் செயற்பாடுகள் தானே உங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுதி மூச்சு வரை அந்த நெறியிலிருந்து விலகியதே இல்லையே. உங்களைப்பற்றி யான் என்ன சொல்வதற்கிருக்கு. உலகறிந்த விடயமல்லவா. உங்கள் நாமம் சொல்லி வாழ வைத்த செம்மலே என் பப்பா.

நீங்கள் இலக்கியவாதி மட்டுமா, எங்கள் குடும்பத்தில் வந்துதித்த கலைச்சுடர் அல்லவா. நான் சிறுமியாகப் பாடசாலையில் சங்கீதம் பயின்றபோது உங்கள் மிருதங்கத்துடன் சேர்ந்து இசைமீட்டபோதும். அந்த குடும்ப இசைமழையில் அயலவர்கள் கூட கூடிவிடுவார்களே.

ஹாஸ்யமாகக் கதைகள் கூறி எங்களை வயிறு குலுங்க சிரிக்க வைப்பீர்களே... இப்படி எத்தனை சம்பவங்கள் ...... விபரிக்க முடியாதே.

ஊரிலிருந்த சமயம் நாட்டுக் கூத்தில் அரசனை கொலுவில் வீற்றிருந்த மிடுக்கு...

எல்லாம் ஏக்கப் பெருமூச்சுகளால்.... அலைமோதுகின்றது. இவைகள் கனவாக, நினைவாக கண்முன்னே...

ஐயோ என் பப்பா,

இந்த இரக்கமில்லா பூமித்தாய் இவ்வளவு விரைவில் இம் மாபெரும் இலக்கிய கர்த்தாவை அநியாயமாக அடிபெயர விட்டுவிட்டாள். இந்த இழப்பை நாம் ஏற்கவில்லை. அதை ஜீரணிக்கும் சக்தியும் எமக்கில்லை. உங்கள் உயிர்நாடியான எழுத்துக்கள் மக்கள் மத்தியில் வாழ்வதால் எங்களுடன் எங்கள் பப்பா வாழ்கிறார். நீங்கள் எங்களையோ, நாங்கள் உங்களையோ விட்டு எங்குமே செல்லமாட்டோம்.

வாழ்க உங்கள் நாமம்.

அன்புச் செல்வக் கடைசிக் குமாரத்தி
ஜெகனி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'மாமா' என்ற என் தந்தை

*மூத்தமருமகன் S.B.ஜோகரட்ணம்.*

மலர் கனியாகி, கனி விதையாகி, விதை மரமாகி, இம்மரமே பல்லாயிரம் மலர்களை மலர்விப்பது தாவரத்தின் வாழ்க்கைச் சக்கரம். மனிதனே குழந்தை யாகி, குழந்தையே மனிதனாவது மனித வாழ்க்கைச் சக்கரம். இச்சக்கரங்களின் ஒவ்வொரு கட்டங்களிலும்தான் எத்தனை விநோதங்கள்; விருப்புகள், வெறுப்பு கள், ஆசாபாசங்கள், அவலங்கள்; ஒட்டும் உறவுகள், வெட்டும் உறவுகள்!

பெற்றோர் – பிள்ளை உறவுகள், அண்ணன் – தங்கை உறவுகள், மாமன் – மாமி உறவுகள், மருமகன் – மருமகள் உறவுகள், பேரன் – பேத்தி உறவுகள்... என்று மனித வாழ்க்கை வாட்டம் நீண்டு கொண்டே போகிறது. அன்னையை அம்மா என்போம்; தந்தையை அப்பா என்போம், ஐயா என்போம், இன்னும் ஆசையுடன் 'பப்பா' என்போம். ஆனால், மாமனை 'மாமா' என்றும், மாமியை 'மாமி' என்றுமழைப்பதுதான் வழக்கம். எங்கள் குடும்பத்து மாமாவையும், மாமியையும் நான் என்றுமே 'பப்பா', 'அம்மா' என்றுதான் அழைப்பேன். இது வெறும் பப்பா–அம்மாவல்ல. அதற்கும் மேலாகத் தம் சொந்தப் பிள்ளைகளைவிட என்னைத் 'தம்பி' என்றுதான் அவர்கள் ஆவலு டன் அழைப்பார்கள். தம்பி என்று அவர்கள் அழைப்பதும், அம்மா– பப்பா என்று யானழைப்பதும் ஒருவரையொருவர் புரிந்துகொண்ட நம்பிக்கையின் அடிப்படையில் வந்ததே. இதைவிடப் பணத்தைக் கறப்பதே நோக்காகக் கொண்ட மருமகன்–மாமா உறவின் அடிப்படையல்ல. மனதையும் மனித உணர்வுகளையும் தாண்டிவந்த இவ்வுறவு எக்கட்டத்திலும் பிரிக்கமுடியாத தொன்றாகும்.

எனது மாமாவாகிய திரு. அகஸ்தியருடன் நான் கொண்டிருந்த உறவு தந்தை–தனயன் உறவைவிடப் பலம் வாய்ந்தது. எம்மிருவரிடையே நிலவிய பரஸ்பர மதிப்பும், புரிந்து கொள்ளும் மனப்பான்மையுமே இப்பிணைப்பை வலுப்படுத்தியது. அவர் நினைப்பதை யானறிவேன்; நான் நினைப்பதை அவர் கூறுவார்! மற்றோரிடம் என்னைப்பற்றிக் கதைக்கும் போதெல்லாம் ஒருபடியும் குறைய விடவே மாட்டார். எனது ஆளுமை, திறமைகளைப் பற்றிப் பகிரங்க மாகக் கூறிவிடுவார். இது பலருக்கு 'வருத்தங்கள்' உண்டாக வழியையும் சமைத்தது உண்மையே. 'எனது மூத்தவர்' அல்லது 'மூத்த குமாரன்' என்று அன்புடன் எனைப்பற்றிக் கதைப்பார்.

இவ்வற்புத மனிதரை நான் சந்தித்த நிகழ்ச்சியே சுவாரஸ்யமானது. இங்கே காதல் உறவு ஒரு பாலத்தை அமைத்தது. அவரது மகளை நான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதலித்த செய்தி காதுக்கெட்டியது. தன் மகள் எவனை நம்பி மோசம் போனாளோ என்ற ஏக்கம்; தம்மைவிட அவள் வேறு ஒருவரைக் கூட விரும்பிவிட்டாளே என்ற இயற்கையான அங்கலாய்ப்பு. வருபவன் தனக்கேற்ற மருமகனாகவிருப்பானோ என்ற அன்பு கலந்த பயம். இவையனைத்தையும் மனதில்கொண்டு வீட்டில் ஒரு 'தர்பாரே' நடத்தினார். மறுநாட்காலை அரச கட்டளைப்படி 'தூதுவன்' என் வீட்டை நோக்கி வந்து, 'அரசன்' என்னைக் காண விரும்புவதாகவும் முடிந்தால் வந்து சந்திக்கும்படியும் கட்டளை; ஒரு வேண்டுகோளுங்கூட. இரவு பூராகவும் கண்ணீர் மழையில் நனைந்த என் 'உயிரை' விடுவிக்கவேண்டுமாயின் இதுவல்லவா சமயம். நொடிப்பொழுதும் சிந்திக்காது தூதுவனுடன் அரசனைக் காணச்சென்றேன். அரசன் எப்படிப்பட்டவனோ என்று ஒருபுறம் பயம்; நான் நியாயமானதைத்தானே செய்தேன் என்ற உறுதி தந்த தைரியம் மறுபுறமுமாக வீட்டுப் படலை மட்டும் வந்தேன். படலைக்கடியில் என் வரவை எதிர்பார்த்துக் கண்ணீருடன் ஒருத்தி; எனது தோற்றத்தைக் காண, ஆவலுடன் இரகசியமாக ஜன்னல்களை நீக்கிப் பார்க்கும் நான்கு கண்கள். நடக்கப்போகும் வேடிக்கையை ஒளிந்திருந்து பார்க்கும் தம்பி–தங்கையரின் தலை மறைவுத் தோற்றங்கள். என்னிடம் ஓடிவந்து ஒரு வார்த்தை கூறமுடியாத பொறியில் ஒருத்தி; அதேவேளை நான் தப்பாகக் கதைக்கமாட்டேனென்ற தைரியம் கலந்த சிரிப்புடன் என்னை வழியனுப்பும் பாங்கு கம்பீரமாக என்னை நடக்க வைத்தது.

ஆளை ஆள் நேரே பார்க்கும் அந்தக் கணம் வந்தது.

முதற்பார்வையிலேயே தன் 'எதிர்பார்ப்புக்குரியவர்தான்' என்ற அவரது முடிவு அவரது கண்களில் இருப்பதைக் கண்டுகொண்டேன். "தம்பி, வாருங்கோ; வந்து இப்படி இருங்கோ" இதுதான் நான் கேட்ட முதல் வார்த்தைகள். சற்றுக் கிலேசத்துடன் அமர்ந்தேன். ஒருவித தனிமை எனைக் கொன்றது. "பிள்ளை, இங்காலை வா. அப்படி இரு!" சமிக்ஞை கிடைத்து விட்டது. நொடிப்பொழுதில் என் தனிமை பறந்தது. ஆளுக்காள் அருகருகே அமர அனுமதி கிடைத்தது. அப்பாடா! இப்போதான் மூச்சு வந்தது. குசலம் விசாரிப்பு: பெற்றோர், சகோதரர் நிலைப்பாடுகள். எதிர்காலக் கல்வி – வேலை வாய்ப்பு, இத்தியாதி வழமையான சம்பாஷணையுடன் எனது அண்ணனைச் சந்திக்க வைப்பதற்கான ஏற்பாடும் ஆனது. 'இறுதிவரை இணைபிரியாமல்' இருப்பதற்கான ஒரு சத்திய வாக்கினைக் கொடுத்தாயிற்று. பிறகென்ன, என் காட்டில் ஒரே மழைதான்! இப்படி இவருக்கும் எனக்குமிடையில் உண்டான உறவுக்கு 22 வயதுகளாகிவிட்டது. இவ்விரு தசாப்தங்களிலும் நான் கண்ட அனுபவங்களோ எண்ணிலடங்கா. எமது திருமணக் காட்சியை நேரில் காண முடியாதவாறு அது பிரான்சிலே நடைபெற்றது. திருமணத்தை வீடியோவில் கண்டு ஆனந்தப் பரவசப்பட்டு அவர் எழுதிய வார்த்தைகள் இன்றும் எதிரொலிக்கின்றன. வாரமொரு கடிதம் வரத் தவறுவதேயில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் நானிருக்கும்போது என் எதிர்கால வளர்ச்சி குறித்து இவர் செய்த கைங்கரியங்களோ மறக்க முடியாதவை. என்னை மேற்படிப்புக்கு இங்கிலாந்துக்கு அனுப்ப எடுத்த புனித முயற்சி, அவருக்கு நம்பிக்கைத் துரோகம் செய்த ஒரு நயவஞ்சகனால் நடுவில் நின்றானது. இருந்தும் இலங்கையில் பிரசித்தி பெற்ற கம்பெனிகளான வாக்கர்ஸ் (Walkers), சிலோன் ருபாக்கோ கம்பெனி (Ceylon Tobacco Company) போன்றவற்றில் எனக்கு வேலைவாய்ப்புகள் இலகுவாகக் கிட்டியதற்கு இவரது தனிமனித செல்வாக்கு துணை புரிந்ததால் மூன்று வருடங்களாகக் கடமையாற்றிய அரச சேவையி லிருந்து ராஜினாமாச் செய்யும் துணிவையும் எனக்குக் கொடுத்தது. இவர் கண்டியில் இராணுவ சேவையில் இருந்த சமயம் 'மகே புத்தா' – எனது மகன் – என்று கூறிக்கொண்டு இராணுவ முகாமுக்குள் அழைத்துச் சென்று உயர் அதிகாரிகளுக்கு அறிமுகம் செய்த அழகை எப்படி மறக்க முடியும்.

சிங்கள, முஸ்லிம் நண்பர்கள், எழுத்தாளர்கள், இலக்கியவாதிகள், அரசியல் வாதிகளுக்கெல்லாம் "எனது மூத்த குமாரன்" என்று வாஞ்சையுடன் அறிமுகம் செய்ததை மறப்பதா? கண்டி, கொழும்பு, தலவாக்கலை, நுவரெலியா போன்றவிடங்களுக்கு நாம் இருவரும் பிரயாணம் செய்யும்போதெல்லாம் நண்பர் கள்போல் உரையாடியதை மறப்பதா? இலங்கை முற்போக்கு எழுத்தாளர் மகாநாடு பண்டாரநாயக்கா சர்வதேச மண்டபத்தில் நடைபெற்றபோது எண் ணற்ற அறிஞர்களைச் சந்திக்க வாய்ப்பேற்படுத்தியதை மறக்கவா? இங்கு பிரான்சுக்கு வந்த பின்னர் குடும்பத்தில் நடைபெற்ற ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் இவர் வகித்த பங்குகளை மறக்கவா? எனது மகனை 21/2 வயதிலேயே பாடசாலைக்கு அழைத்துச் சென்று, திரும்பி அழைத்து வரும் அழகிய காட்சியை மறப்பதா? ஒவ்வொரு வருடமும் ஜனவரி 6ம் திகதி எனது மகனது பிறந்த நாளின்போது அவருக்கு அரச முடி தரித்து (பிரான்சில் இது ஒரு முக்கிய சம்பிரதாயமாகும் – La fête des Rois Mages) ஆசீர்வதிக்கும் அழகை மறப்பதா? இப் பிறந்தநாள் விழாவின்போது குடும்பமாகச் சேர்ந்து ஒருவர் பாட, மற்றவர் நடனமாட, மகன் ஜனிக்ராஜ் வயலின் இசை மீட்க, அதற்கு இவர் மிருதங்கம் வாசித்து வீட்டைக் கலைக்கோவிலாக மாற்றிய அழகை மறப்பதா? தினசரி இரவு ஆறரை மணிக்குள் தன் பேரனைத் தொலைபேசியில் அழைத்துக் குசலம் விசாரித்து, "நல்லாய்ப் படியுங்கோடி, அம்மப்பா எல்லா உதவியும் செய்வேன்" என்று ஊக்கமளித்ததை மறக்கவா?

எமது குடும்பத்துக்குள் எந்தவொரு நிகழ்ச்சி நடைபெற்றாலும் என்னையொரு சொல்லுக்கேளாது முடிவெடுப்பதென்பது இவருக்குப் பழக்க மற்றவொன்று. "மூத்த குமாரன் என்ன சொல்லுகிறார்" என்ற பதிலையே எதிர்பார்த்திருப்பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இற்றைக்கு ஐந்து வருடங்களின் முன் திடீரென இவர் சுகவீன முற்றபோது, பாரிசில் வைத்தியசாலையொன்றுக்கு எடுத்துச்சென்ற வேளை, இரண்டு மணி நேரமாயும் அவரைக் கவனிக்காத நிலையில் அவர் உடல் நிலை மோசமடைந்ததைக் கண்டு, டாக்டர்மார், தாதிமாருடன் நான் ஏற்படுத்திய ரகளையையும் அதன் விளைவாக அவர்கள் ஓடி விழுந்து தன்னைப் பரிசோதித்து, தான் மரணவாயிலுக்குச் சென்று கடைசி நொடியில் திரும்பி வந்ததையும் அடிக்கடி பலருக்குக் கூறுவார். "அன்றைக்குப் போகவேண்டிய என்னுயிரை என்ரை பிள்ளைதான் இழுத்துப் பிடித்து வைத்தது" என்று பெருமையுடன் கூறி மகிழ்வார். கடந்த 5 வருடங்களாக அவரைக் கவனித்து வந்த டாக்டர்களுடன் எது கதைக்க வேண்டுமானாலும், "மூத்தவர் வந்துதான் டாக்டர் ஜேம்சுடன் கதைக்கவேணும். அவர் கதைத் தால் தான் திருப்தியாகவிருக்கும்" என்று அடம் பிடிப்பதையும் நானறிவேன். ஒரு தடவை டாக்டர் ஜேம்ஸ் அவர்களைச் சந்திக்க வைத்தியசாலைவரை வந்தாயிற்று. எனது மகனின் வயலின் இசை நிகழ்ச்சி Noisiel என்ற இடத்தில் இரவு ஏழு மணிக்கு நடைபெறவிருந்தது. இவருக்கோ இருப்புக் கொள்ள வில்லை. டாக்டருக்கு ஒரு வார்த்தையும் கூறாது இரகசியமாக தலைமறை வாகிவிட்டார். இங்கு பரிசோதனைக்குட்பட வேண்டியவர் இதை விடுத்து, சனத்திரள் நிறைந்த மண்டபத்தில் தன் பேரனின் இசையில் லயித்துப் போயிருந்தார். மறுதடவை டாக்டரைக் கண்டபோது காரணம் வினாவினார். நான் நடந்ததைக்கூற, அவர் விழுந்து, விழுந்து சிரித்துவிட்டு, "அது சரிதான் மிஸ்டர் அகஸ்டின்; உடம்பையும் கவனிக்கவல்லவா வேண்டும்" என்றபோது ஆசிரியருக்குக் கட்டுப்பட்ட மாணவன்போல் ஒரு புன்முறுவ லுடன் தன் பிழையை ஒப்புக்கொண்டதை என்றுமே மறப்பதற்கில்லை.

சென்ற வருடம், 1994ம் ஆண்டு, யூலை மாதம் எமது விடுதலை நாட்களைக் கழிக்க ஜேர்மனி செல்லவிருப்பதை அறிந்தவுடன், "தம்பி போனால் நாமும் அவருடன் போவோம்" என்று குழந்தைபோல் குதூகலமாகப் புறப்பட்டு எம்முடன் வந்தார். அங்கிருந்த இரு வாரங்களும் மிகவும் மகிழ்ச்சி யுடன் காணப்பட்டார். நாம் ஆற்றில் குளித்தபோது தானும் ஒரு சிறுவனாக மாறி எங்களையும் தாண்டி, சுழியோடல், பிறநீந்தல் போன்ற வித்தைகளைச் செய்து காட்டி, எம்மை வியப்பிலாழ்த்தினார். கூடவே நண்பர்களின் வருகை யும், இலக்கிய உரையாடல்களும், சிறு சுற்றுலாக்களும், சுவையான உணவு வகைகளும் அவரை மிகவும் மகிழ்ச்சியடையச் செய்ததை இன்று நினைவு கூருகின்றேன்.

கடந்த ஈராண்டுகளிலும் தனது இலக்கிய, மற்றும் அரசியல் நண்பர் களில் பலரை ஒன்றன்பின் ஒன்றாக இழந்து வந்தார். அவர்களின் மறைவால் இவர் ஒவ்வொரு தடவையும் அடைந்த வேதனையை நாமறிவோம். அடுத்த தாகத் தன் முடிவு நெருங்குவதை இவர் அறியாமலிருந்திருக்க நியாய மில்லை. இருந்தும் மரணம் பற்றி எந்த விகடமான பயங்க போக்கோ,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிலேசமோ கொண்டதில்லை. மாறாக அதை ஒரு பரிசுத்தமான நிகழ்வாகவே கருதி வந்தார்.

சென்ற நவம்பர் மாதம் 28ம் திகதி மறக்க முடியாத ஒரு தினமாகும். வேலைநிறுத்தம் காரணமாகப் பாரிசில் பிரயாணங்கள் தடைபட்டுப் போயிருந்த போதும், இவரை எப்படியாவது வைத்தியசாலைக்கு ஒரு முக்கிய சிகிச்சைக் காகக் காலை மணி 8.30க்குக் கொண்டு சென்றேயாகவேண்டும். அதிகாலை 5 மணிக்கு எழுந்து பல சிரமங்களுக்கூடாக பாரிஸ் வந்தபோது இவர் நித்திரையை விட்டு எழுந்திருக்கவில்லை. அந்தளவுக்கு இளைத்துப் போயி ருந்தார். ஒருவாறு விழிக்கவைத்து, டாக்சி மூலம் வைத்தியசாலை நோக்கிப் பயணமானோம். சாதாரணமாக இருபது நிமிடம் எடுக்கும் இப் பயணம் இரண்டரை மணி நேரத்தையும் தாண்டியது. வைத்தியசாலையில் சிகிச்சை ஆரம்பித்தாயிற்று. அவரை விட்டு அடி பிரியவேயில்லை. "தம்பி, தண்ணீர் கொஞ்சம் தாருங்கோ" என்பார்; ஒரு நிமிடம் கூடச் செல்லாது, மீண்டும் அதே வேண்டுகோள். இப்படி அவர் குடித்த தண்ணீருக்கோ அளவில்லை. இவரைப் பரிசோதனை செய்த டாக்டரிடம் இவர் யார் என்று விளக்கி, இவருக்கேதும் நடந்தால் அது ஒரு பெரிய விடயம்; ஆனபடியால் ஒழியாமல் இவரது உண்மை நிலையைக் கூறும்படி கேட்டேன். நீண்டநேர ஆய்வுகளின்பின் அவர், "இவரது நிலை நாளுக்கு நாள் மோசமடைந்து வருகிறது. இவர் வீட்டிலிருந்தவாறே இரத்த பரிசோதனை செய்ய ஏற்பாடுகள் செய்கிறோம். தேவையேற்பட்டவுடன் அவரைக் கொண்டு வந்து சிகிச்சை யைத் தொடருவோம்; அதுவரை நீங்கள் பயப்படவேண்டாம். இரு மாதங் களுக்குப் பின் இவரது நிலையை நாம் உத்தரவாதம் செய்வதற்கில்லை" என்று கூறினார். எனக்கு ஏற்பட்ட அதிர்ச்சியை அவருக்கோ மற்றவர் களுக்கோ காட்டாது இவ்வுண்மையை மனதில் வைத்துக்கொண்டு இம் முறை கொண்டாடவிருந்த கிறிஸ்மஸ் பண்டிகையை அனைவரும் ஒன்றாகக் கொண்டாடி இவரை மகிழ்வித்தபின் சிறிது சிறிதாக இவர் நிலையை அனைவருக்கும் கூற ஏற்பாடுகள் செய்து வந்தேன். எனக்கிருந்த அவகாசம் ஏறக்குறைய இரு மாதங்கள். நத்தார் பண்டிகைக்கு இன்னும் 27 நாட்களே இருந்தன. மீண்டும் டாக்சி மூலம் அவரை வீட்டுக்குக் கொண்டு வந்து விட்டு எனது வீடு செல்ல முனைந்தேன். வேலை நிறுத்தம் காரணமாக பிரயாணச் சிக்கலில் 5 மணி நேரம் அகப்பட்டுக்கொண்டேன். தான் இருந்த நிலையையும் மறந்து நான் வீடு வந்து சேர்ந்து விட்டேனோவென்று அறிய விடாது டெலிபோன் செய்துகொண்டே இருந்தார். கடைசியாக அவர் அழைத்தபோது எனது மனைவி, நான் வந்துவிட்டேனென்று கூறியவுடன் தன்னையும் மறந்து, "என்ர ராசா, சரியாகக் கஸ்டப்பட்டு விட்டீங்களோ" என்று பரிந்துரைத்தார். இத்தகைய அன்பும் பாசமும் கொண்ட ஒரு விசேடமான மாமா இவர் ஒருவர்தான் இவ்வுலகில் இருந்திருக்கவேண்டும். அந்த நாளை கண்ணீர் மல்க இன்று பெருமையுடன் நினைவு கூருகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வளவு செய்தும் இறுதிவேளை அவருடன் ஒரு வார்த்தை கூறாது அவரை இழந்து விட்டோமேயென்று அழுது பரதவிக்கும் எம் மத்தியில் 'கண்ணிருந்தும் குருடாகவும், காதிருந்தும் செவிடாகவும்' இருந்து விட்ட சில மனிதப் பிண்டங்களை நினைக்கும்போது, 'நெஞ்சு பொறுக்குதில்லையே... இந்த நிலைகெட்ட மாந்தரை நினைத்திடும்போது...' என்ற பாரதியின் வேதனைதான் எஞ்சி நிற்கிறது.


ஈழத்தின் மூத்த எழுத்தாளன்; தூய சிந்தனாவாதி; எந்தவொரு சமயாசாரங்களுக்கும் கட்டுப்படாத சுதந்திரப் பறவை; மாபெரும் படைப்பாளி; பரிசில்களைத் துச்சமெனத் தூக்கியெறிந்த மாவீரன். எம் வருங்காலத் தமிழ்ச் சந்ததிக்கோர் துருவ நட்சத்திரம்; தேசாபிமானம் கொண்ட மனிதாபிமானி. இத்தனையும் நிறைந்தவரை எனது மாமாவாக அடைந்ததில் அன்றும், இன்றும், என்றும் பெருமையடைகின்றேன். இவர்தான் மாமா என்றான என் அருமைத் தந்தையாவார்.

இவர் புகழ் என்றும் வாழ்க!






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தன்பேரக்குழந்தைகளுடன் எஸ்.ஏ.





இளமையில் எஸ்.ஏ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனியொருவனுக்கு.....

-எஸ். அகஸ்தியர்.

"களவெடுப்பியோ"
"இல்ல"
"பொய் சொல்லுவியோ"
"சொல்லேல்ல"
"அடுத்த வீடுபோவியோ"
"போகேல்ல"
"கூடுவாரத்துகளோட திரிவியோ"
"இல்ல: திரியேல்ல"

செப்பமான சம்பல் அடி.
பொடியன் மிதிபட்ட நாக்கிளிப்புழுவாட்டம் சுருண்டு கீழே விழுந்தான்.

அடிபோட்ட பூவரசங்கம்பு, அதன் மூச்சுத்தெறித்துச் சிலும்பலாய்ப் போய்விட்டது. ஒருவித அந்தகாரத்தவிப்புத்தொங்க, கெந்தகித்துப்பெருஞ்சினப்போடு கம்பை நரித்து எறிந்துவிட்டு, தாய் சின்னத்தங்கம் திண்ணையிலே குந்திக்கொண்டாள்.

பெடியனை ஓரக்கண்ணால் பார்த்தாள்.

நெஞ்சிரக்கம் ஊனித்துப்புரையோட, அவளின் தேகம் கொலுக்கழன்று இடிந்துபோய்விட்டது.

குஷ்டரோகத்தவ்வல் வலிச்சல் நாய்க்குட்டிமாதிரி பையனின் உடம்பு குறாவிவிட்டது. அடிபட்ட தழும்புகள் நச்சுத்தேள் புழுவாட்டம் அதைப்பெடுத்துக்கொப்பளித்து ஊதின. ரணகாயங்களிலிருந்து இரத்தக்கசிவு ஊனமாக வழிந்தது. ஊமைக்காயங்களோ 'சதிர'மடங்கலும் அம்மிப்பிரளயித்தன. கேவி எடுக்கிற விக்கல், தொண்டைக்குவளையை இடறி, இடுக்கி அடித்து 'முடுக்'கிட்டுக்கொண்டது. வாய்ச்சிணுங்கல் ஓயவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொடியனுக்கோ ஏலவே கோது நெஞ்சு. மேலும் இரண்டுநாள் போஷாக்கில்லாவிட்டால் பையனின் விலாச்சோணை தலைகோதப்பக்குவமான ஓர் எலும்புச்சீப்பாகிவிடும் என்பதற்கு இன்றைய 'கலவைத்தானம்' பண்ணும் நமது 'ஸ்பெஷலிஸ்டு'களின் சிபார்சு கூட வேண்டியதில்லை.

பையன் கேவிகேவி அழ, விலா எலும்புகள் சதைப்பாடத்தை நுளுத்திப்புடைத்துக்கொண்டு தோற்சவ்வுகளைக் குத்திக்கிளம்பின.

பொடியனின் பிஞ்சு உடலில் நாலுநாளாக அரித்தெடுத்த பசி, அவனின் அரிக்குடல் சுருங்கிக்கிளர்ச்சி பண்ண ஆரம்பித்தால், நமது 'பெரியவர்கள்' காலங்காலமாகக் கத்திக்கத்திச்சொன்ன 'நல்லொழுக்கம்' என்ற நற்சாட்சிப்பத்திரத்தையும் உதாசீனம் செய்து, அதைக்கருத்திற்கொள்ளாமல் அவன் குட்டிச்சாத்தான் தொழிலில் இறங்கிவிட்டான் என்பதைத்தாய் சின்னத்தங்கம் கசடறத் தெரிந்துகொண்டாள்.

என்றாலும் ஊர்வாய் சும்மா கிடக்குமா?

இல்லாததையே இருப்பதாகச் 'சத்தியம்' செய்து ஆனந்தப்படும் 'பரிசுத்த மனிதர்கள்' இந்தப்பொல்லாப்பைக்கண்ட மாத்திரம் என்னவெல்லாம் சொல்லிப்பழிப்பார்கள் தெரியுமா?

அப்பேர்ப்பட்ட அந்த வக்கணைகளையெல்லாம் அவள் ஒருகணம் நினைத்து உருப்போட்டுப்பார்த்தாள்.

'ஈன்றபொழுதிற்பெரிதுவக்கும் தன்மகனைச் சான்றோனெனக்கேட்க'விருந்த இந்தத்தாயானவளுக்கு, அப்படி ஓர் அவமானத்தைத் தாங்கவே முடியவில்லை.

'பசி கொண்டால் நாக்கை இழுத்துச்சாகலாம். ஆனால் களவு என்பதை மனசாலும் நினைக்கக்கூடாது' என்று அடுத்த மரவள்ளித்தோட்ட வளவுக்காரர் அடிக்கடி சொல்லிக்கொள்வதில் வேறு இவள் நம்பிக்கை பூண்டவள்.

'களவு அவமானந்தான்?'

ஆதலால் களவெடுத்த மைந்தனுக்கு அகப்பட்ட கையோடு இன்று இந்தத்தண்டனை.

இன்று அவள் 'போதும் போதும்' என்ற அளவிற்கு பையனுக்கு வேண்டிய 'சாப்பாடு' கொடுத்திருக்கிறாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொடியனின் தலையெழுத்து, அவன் 'அதை' வாங்கிக்கட்டிக்கொண்டு எடுத்த அடி நகர்த்தாமல் நிலத்தில் விழுந்து சுருண்டு கிடந்து தேம்பிக்கொண்டிருந்தான். அந்தக்கண்ராவிக்கோலந்தான் நொந்து பெற்ற தாயான அவளின் நெஞ்சை ஆகவும் கெந்தகிக்கச்செய்து கொண்டிருக்கிறது.

"ஆ, நான் பெருங் கறுமக்காறி, என்ர ராசனுக்கு என்ர பச்சைமண்ணுக்கு நல்லா அடிச்சுப்போட்டனே பாவி" என்று நிர் விசாரமாகத் தன்னையே கறுவிக்கொண்டாள்.

மறுகணம், 'இந்தக் கொடுவாளின்ர வயித்தில இது என்ன கறுமத்துக்கு வந்து புறந்துது?' என்று ஒரு விசுவாமித்திரக்கணை தொடுத்துவிட்டு, 'இந்தப்பாதகியின்ர வயித்தில வந்து சம்பவித்ததற்காக, நீ எந்தக்காலமும் உத்தரிச்சுச் சாகு' என்று முனகிக்கொண்டு ஓரக்கண்ணால் அவனைப்பார்த்து நெஞ்சு விம்ம ஒருபாட்டம் தனக்குள் பூகம்பித்துக்கொண்டாள்.

**'இந்தக் கொடுவாளின்ர வயித்தில இது என்ன கறுமத்துக்கு வந்து புறந்துது?' என்று ஒரு விசுவாமித்திரக்கணை தொடுத்துவிட்டு, 'இந்தப்பாதகியின்ர வயித்தில வந்து சம்பவித்ததற்காக, நீ எந்தக்காலமும் உத்தரிச்சுச் சாகு' என்று முனகிக்கொண்டு ஓரக்கண்ணால் அவனைப்பார்த்து நெஞ்சு விம்ம ஒருபாட்டம் தனக்குள் பூகம்பித்துக்கொண்டாள்.**

கெம்பித்தகித்துப் பொம்மிய நெஞ்சுப்பொதி, அவள் கமண்டலத்தில் ஏறிப்புரையோடிய பின், மிச்சச் சக்கையாக அவள் கண்களிலிருந்து கண்ணீர் 'பொலு பொலுத்துக்கொட்டியது.

அவளின் தேகமும் இளைத்துப்போய்விட்டது.

அந்தப்பிள்ளையைத் தவமிருந்து பெற்ற 'குற்றத்திற்'காக, அவனை விஞ்சி அவள் வயிறு வாரக்கணக்கிலே காய்ந்து கொண்டிருக்கிறதை எப்பொழுதோ கண்மூடிய புருஷனுக்கு இப்பொழுதும் ஒருதடவை முறையிட்டாள்.

தேவகருணை சுரந்து அதன் அக்கினிப்பரீட்சையில் தேறியதும் 'திடீ'ரென எழுந்த கடவுள் கடாக்ஷத்தால் 'பரமபதம்' சேர்ந்த - இது அன்றைய சித்தர்களினதும், இன்றைய நவீன தத்துவர்களினதும் பழைய கண்டுபிடிப்பின் புதிய மோஸ்தர் மாணிக்கத்துக்கு அவளின் முறைப்பாடு எங்கே தெரியப்போகிறது? பாவம், அவள் முழு விசுவாசத்துடன் முறையிடத்தான் செய்தாள். ஆனால் அவள் வேண்டிய அனுக்கிரகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டும் கிடைக்கவில்லை. தாயும் பிள்ளையும் அழுதுவிட்ட கண்ணீர், முகங்களில் வழிந்ததுதான் மிச்சம்.

......தோலிருக்கச்சுளை வாங்கிகளின் தத்துவச்சிருஷ்டியான 'சுரண்டல் வித்தை' என்னும் நித்திய தரித்திர நாராயணனின் ஆசீர்வாதம், தின்ற வயிறுபாதி தின்னாத வயிறுமீதியாக 'அநித்தியம்' என்ற இந்தப்பூலோக வாழ்க்கையில் அந்த இரண்டு ஜீவன்களும் உழன்று கிடந்தன.

அன்று ஒரு நாள்....

வழக்கம் போல் எரிகிற அவள் வயிறு புதிய வேகங்கொண்டு சன்னதமாடியபோது வழக்கத்துக்குமாறாகவே அவள் கண்கள் இருண்டு மங்கின. காதுகள் 'கிண்ணரம்' போட்டன.

பசி....

ராஜனைப்பற்றிச் சொல்ல வேண்டுமா?
அவன் தலை அறுத்த கோழி மாதிரி, தண்ணீருள் தளம்புகின்ற பாசிபோல் சோர்ந்துபோய் ஊசலாடிக்கொண்டு கிடந்தான்.

குடலை அறுக்கிற பசி.

ஒருகணம் 'சடா'ரென்று எங்கோ ஒரு சத்தம்.
அது,அந்த அடுத்தவீட்டுக்காரரின்
மரவள்ளித்தோட்டத்தையடுத்துக்கிடக்கின்ற
அடிவளவுப்பனைக்கூடலுக்குள்ளேயிருந்து, கிளடுதட்டிய பனங்காய்ஒன்று
அகோரமாய் 'தொழுக்'கென்று விழுந்ததொனி.

பையனுக்கு மண்டை முட்டின யோசனை எழுந்தது.
ஆனால்....?

மரவள்ளிக்கட்டையைப் பெயர்த்துக்கொண்டு வந்த
'குற்றத்'திற்காகத்தானே அம்மா அன்று கண்டித்தாள்?

ஆனாலும், பசி நியாயம் பேசிற்று...
'இது சும்மா விழுந்த வெறும் பனங்காய் தானே?'
பொடியனின் நடுத்தீர்ப்பு முடிவுக்கு வர ஒருநிமிடம் எடுத்தது.

பயல் வஞ்சகம் இல்லாமல், ஞானம் பெற்றவன்போல் 'திடீ'ரென்று புதிய உஷார்பெற்றுத் துள்ளிக்குதித்து முற்றத்தைத்தாவினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிரே தாய் பத்திரகாளி கோலத்தில் அவன் கண்களுக்கு காட்சியளித்தாள்.

உடனே அவன் வாலைச்சுருட்டி அடுப்புக்குள் முடங்கும் நாய்க்குட்டிபோல மெதுவாகப்போய்த் திண்ணையில் குந்தி விட்டான்.

ஆனால்?

அந்தப்பனங்காய் விழுந்த அகத்திக்குப்பின் அவளுக்கும் மனசு 'என்னவோ' பண்ணிற்று. வயிற்றுச்சுருக்க எக்கல் ஒருதடவை பனை ஏறிக்குதித்தது. சிரசு முட்டின யோசனை வந்து போயிற்று. ராஜனைட் 'பரிவோடு' பார்த்தாள். வாய் உமிந்து ஊளறிற்று.

மெல்ல அங்குமிங்கும் பார்த்து ஒருவித நாணச்சிலிர்ப்போடு கண்களைச்சிமிட்டிக்கொண்டு, ராஜனைப் 'பரிவோடு' பார்த்தாள். நாறல் மீனைப்பார்த்த கள்ளப்பூனையாட்டம், பயலும் அப்போது தாயை ஏற இறங்கப்பார்த்தான்.

ஒருகணம் ஓர் இடைவெளித்தகிப்பு, இருவரையும் ஆட்கொண்டது.
"டே ராஜா"
"என்னம்மா?"
"ஒரு சங்கதி சொல்றன், 'சட்'டென எழும்பி இப்பபடிக்கிட்ட வா"
அவன் தயக்கமாக எழுந்து நழுந்திக்கொண்டே கிட்டவந்தான்.
அவள் நமட்டிச்சிரித்தாள்.
"ஏனம்மா சிரிக்கிறாய்?"

"ஓடிப்போய் அந்தப்பனங்காயை எடுத்துக்கொண்டு வா. வரேக்க நல்லதாப்பாத்து ஒரு இழுவை மரவள்ளிக்கட்டையும் இடுங்கியா, போ"

அவன் பரிதாபத்தோடு, நம்பிக்கையிழந்து ஏக்கவிழிகளால் பார்த்தான். பின்பு ஏங்கின விழிகளை உருட்டித்தாயைப் பார்த்து முகம் வறட்டிச்சிரித்தான்.

அக்கினிப் பரிசைஷ, சோதனைக்களம்.

'அம்மா என்னைச்சோதிக்க, பொறுப்பான நேரத்தைக் கண்டுபிடிச்சிட்டா.'

இரங்கி வழிந்த அவனின் வறட்சி விழிகள், அப்பொழுதும் அவளைட் பார்த்த படியே கிடந்து முழுசின.

"ஏன்டா உப்புடிப்பாக்கிறாய். போ, போய் அதை எடுத்துக்கொண்டா"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராஜன் அப்பொழுதும் அசையவில்லை.
"ஏன் சுணங்கிறாய், போ"
"உண்மையாத்தான் சொல்றியோ?"
"உண்மைதான், ஓடு"
"என்னைச் சோதிக்கிறாய்?"
"இல்லையடா ராஜா"
"பிறகு நீ அடிப்பாய்"
"நான் இனி அடியன் ராஜா. ஓடிப்போய் எடுத்தா"

ஏலவே அவன் கிளித்தட்டுப் பாச்சல் காரன். பையனை இனிச் சொல்லவேண்டுமா?

எடுத்தான் ஓட்டம்.
கவடு கிளியிற ஓட்டம்.
விண்மண் பாராமல் குருவிப்பாச்சலில் ஓடிப்போய், 'சாகிறேன் பெண்ணே, பிடியடி பந்தயம்' என்றிருந்த ஒரு தற்குறியான வெறும் உக்கல் வேலிக்கதியால் ஒன்றைச் 'சட்'டென்று முறித்துப் பொட்டுப்பிரித்துப்போன அந்த அசுர சாதனையை, பெற்றதாய் வியந்து பார்த்துக்களிகூர்ந்தவளாய், மெல்லக்குசினிக்குள் பிரவேசித்தாள்.

போன பையன் திரும்பி வரக்காணோம்.
'என்ன சுணக்கம்?' என்று அவள் தனக்குள் தன்தலையைப்போட்டுப் பனங்காய் பினைந்தாள்.

அப்போது ஒரு குரல்-அது சிங்கக்கர்ஜனையாக வந்து உறுமி அவள் காதறக்கேட்டது.

"டேய் கள்ள ராஸ்கல், தாரடாது மரவள்ளிக்கட்டையை இழுத்துக்கொண்டு ஓடுற வடுவா?"

சின்னத்தங்கத்தின் நெஞ்சு கைவிட்ட பானைபோல் நொறுக்கிட்டது.

அவளுக்கு 'விஷயம்' வள்ளீசாகப் புரிந்துவிட்டது.
பெண்களுக்கு நெஞசிலே நிறைந்து கிடக்கும் பாசம், தலையில் உள்ள மூளையின் வேகத்தை மழுங்கவைக்கவே உதவுகிறது என்பதை இப்போதுதான் அவள் சரியாகத்தெரிந்துகொண்டாள்.

இருந்தும் என்ன?
தலையாடி வீட்டில் தஞ்சம்புகுந்த கள்ளன் மாதிரிச் சங்கதிபிழைத்து விட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொடியன் களவெடுத்த கையோடு 'பிடிபட்ட பாஸ்' பெரும் விபரீதத்தில் வந்து முடிந்து விட்டதை, 'தாய்' என்ற அவள் 'சக்தியாற்கூடத் தடுக்கமுடியவில்லை.

'களவெடு, பொய்சொல்லாதே' என்ற பெரியவர்களின் சித்தஞான வாக்குகள் அப்போது நினைவில் வந்திருக்கவேண்டும், உடனே பையன் வளவுக்காரனின் காலில் விழுந்து 'உண்மை' என்ற அந்த மந்திரச்செபமாலையையும் உருட்டிப்பார்த்தான்.

காரியம் கைகூடவில்லை.
இந்தக்காட்சிகளையெல்லாம் அவள் கண்களில் ஊனங்கக்கட் பார்த்துக்கொண்டு நின்றாள்.

பெற்றவயிறல்லவா? விளக்கு அணைந்தமாதிரி அவள் நெஞ்சு 'பக்'கென்று திகைத்தது. கண்கள் இருண்டு கொண்டு வந்தன.

'ஐயோ, நான் பெத்த என் குஞ்சே!'
அவள் அலங்க மலங்க விழுந்து, கோலங்கலைந்து எழுந்து நின்றுபார்த்தாள். அதற்குள்ளே அந்த வளவுக்காரச் சடாமுனி, ஆக்ரோசமாக அவன்முதுகிலே, அதே மரவள்ளிக்கட்டையைப் பறித்து அடித்த அடி தாங்காமல் பையன் நாரிநெளிய, உடலை வளைத்து "என்ர அம்மா?" என்று வீரிட்டுக்கதறிக்கொண்டு முற்றத்திலே.... தாயின் காலடியில் சுழன்று விழுந்தான்.

**அதற்குள்ளே அந்த வளவுக்காரச் சடாமுனி, ஆக்ரோசமாக அவன்முதுகிலே, அதே மரவள்ளிக்கட்டையைப் பறித்து அடித்த அடி தாங்காமல் பையன் நாரிநெளிய, உடலை வளைத்து "என்ர அம்மா?" என்று வீரிட்டுக்கதறிக்கொண்டு முற்றத்திலே....
தாயின் காலடியில் சுழன்று விழுந்தான்.**

தாயின் பரிதாபக்கோலம் பையனின் நெஞ்சைக்கரைத்துவிட்டது. அவன் 'திக்'கிட்டுப்போய் வாயசைக்காமல் கிடந்தான்.

அவள் பையனை அணைத்து வைத்துக்கொண்டு மறுபடியும் அலறினாள்.

"என்ர ராசனுக்கு நல்லா அடிச்சுப்போட்டானோடி?"
"ஓம்மா நீதாம்மா போகச்சொன்னே?"
அவள் இதயத்தில் ஈட்டிகுத்தினமாதிரி விழுந்தது அந்தக்கேள்வி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆ என் ராசா. நான் போகச்சொல்லேல்லையடா. இந்த வயிறுதான் அப்படிச் சொல்லிச்சுதடி. நான் என்ன செய்ய?

"அதுக்காவத்தாம்மா நானும் அண்டைக்கு களவெடுத்தன். களவெடாதையெண்டு 'போதிச்சு' எனக்கு அடிச்சுப்போட்டியே?"

அவளின் 'சதிரம்' குல்லிட்டது.
"பிறகு நீயே போகச்சொன்னாய். போனேன். இப்ப நீ அடிக்கேல, அடுத்தவன் பிடிச்சு அடிக்கிறானம்மா. இதெல்லாம் என்னம்மா?"

அந்தக்கேள்விக்கும் விடைதெரியாமல் அவள் நெஞ்சு கறுவிச்சாம்பிற்று.

தான் பெற்ற சின்னஞ்சிறுவனின் பூதாகரமான அந்தக்கேள்விக்கணைக்கு அவள் அப்பொழுதும் பதில் சொல்லாமல் 'தறுதறு'வென முழுசிக்கொண்டிருந்தாள்.

அதற்குப்பதிலாக அப்போது அவளின் கண்களில் கண்ணீர்தான் துளும்பித்தெறித்தது.

"வளவுக்காரன் அடிச்சது எனக்குத்தானே நோகுது. அதுக்கு நீ ஏனம்மா அழுகிறே?"

"டே ராஜா, நான் இப்ப உனக்காக அழேல்லையடி. இந்த உலகத்தை நினைச்சுத்தான் அழுகிறேன்ரா"

ராஜன் சற்று நிதானமா யோசித்தான். அப்போது அவன்முகத்தில் ஒரு வெறுப்புத்தட்டியது.

"சரிதானம்மா, இது உலகமில்லை, பெரும் 'நரகம்மா'. இந்த நரகம் எப்ப அழியும்மா?"

சிறுவனுக்கு வந்த ஞானம் தாயின் நெஞ்சைக்குலுக்கியது.

"ஆ, என் ராஜா. நீ என் பிள்ளையில்லையடா. தெய்வமாய் வந்து பிறந்த உன்னைப் பாவி நான் தெரியாமல் அடிச்சுக்கொடுமைப்படுத்திப்போட்டனே, ஐயோ...!"

அந்த அந்தகாரநிலையையும் பொருட்படுத்தாமல் அவன் அந்தக்குரலை ஊடறுத்தவாறு தாயைப்பார்த்துக்கேட்டான்:
"அம்மா நான் களவெடுத்தது பாவமா?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'இல்லை ராஜா'

திணறிய வாய் உப்பி அடங்க, அதை ஆமோதிக்கும் தோரணையில் தலையை ஆட்டிக்கொண்டு, ஓ வென்று குரல் வைத்தவண்ணம், தான் பெற்ற அந்தத் தெய்வத்தை அள்ளிஎடுத்துக் கட்டி அணைத்துக் கொஞ்சினாள் தாய்.

ஆனால்.....?

அந்த அழியாத நரகத்தில், இந்த இரண்டு ஜீவாத்மாக்கள், அன்றிரவும் காய்ந்த வெறுங்குடல்களோடுதான் குறாவிக்கிடந்தன.

பையன் சொன்ன அந்த நரகம் இன்னும் அழியவில்லை.

●

*(1970ம் ஆண்டு 'தாமரை'யில் வெளிவந்த இக்கதை 'அகஸ்தியர் கதைகள்' தொகுப்பிலும் இடம்பெற்றுள்ளது)*

**படைப்புக்கள் பற்றி....**

*நீதி நேர்மை, சமத்துவம், சகோதரத்துவம் கொண்ட உலகவியாபித சமுதாயக்கோட்பாட்டை நான் பரிசுத்தமாக நேசிப்பவன். இந்த நோக்கில்தான் எனது இலக்கியங்களைப்படைத்து வருகிறேன்.*

*மனதனை மனிதன் சுரண்ட, ஒருமனிதனின் தயவில் மற்றொருவன் வாழக்கூடாத சுதந்திரசமுதாயத்துக்கு வழிஅமைத்துச்செல்லும் நோக்கமுடையதாகவே எனது படைப்புக்களை அளித்துவருகிறேன்.*

*மக்களிடையே வேரூன்றியுள்ள வேண்டாத மூடநம்பிக்கைகள், ஒருவனை ஒருவன் ஏமாற்றிப்பிழைக்கும் கயமைத்தனங்கள், இத்தகைய சமுதாயஅமைப்பில் தோன்றும் 'திடீர்ப் பிரமுகர்'களின் போலித்தனங்கள்—இவைபோன்ற நாசசக்திகளை அம்பலப்படுத்துவதும், மக்களின் எதிரிகளை மக்களுக்கு இனங்காட்டி அவர்களுக்கு விழிப்புணர்வு ஊட்டுவதும் எனது படைப்புக்களின் உள்ளடக்கம்.*

— எஸ். அகஸ்தியர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுத்தை ஆளும் அகஸ்தியரும் நானும்.

ஆசிரியர். ச. சச்சிதானந்தம்.

இந்தப்பெரியவரின் அறிமுகம் 1986ல் இவரின் மூத்தமகள் நவஜோதி யோகரட்ணம் மூலம் கிடைத்தது. பிரான்ஸில் முதன்முதலில் நிறுவப்பட்ட Ecole de Tamoul இல் சிறுவர்களுக்குத் தமிழ் கற்பிக்கும் ஆசிரியையாக பணிபுரிந்தபோது, தனது தந்தையாரை இப்பள்ளிக்கூடத்துக்கு அழைத்துவந்து அறிமுகம் செய்துவைத்தார். அகஸ்தியருக்கும் எனக்கும் சில கொள்கைகள்–குறிப்பாக சமூகத்தில் நிலவும் ஜாதி, மதம், மீதான மூடநம்பிக்கைகள் மீதான அறிவியல் பார்வையில் ஒற்றுமை, உடன் பாடு இருந்ததினால் காலப்போக்கில் நெருக்கம் ஏற்பட்டுவந்தது. இவரின் பேச்சுக்களையும், எழுத்துக்களையும் புரிந்துகொள்கிறபோது இவரின் அறிவின் ஆழம் இவருடன் தொடர்ந்து பழகவேண்டுமென்ற விருப்பத்தைத்தந்தது.

சிலகாலம் சந்திக்காது இருந்துவிட்டோம். 1991 ல் உலகத்தமிழ் பண்பாட்டுக்கழகத்தலைவர் பேராசிரியர் வீரப்பன் பிரான்ஸ் வந்தபோது என்வீட்டுக்கு வந்திருந்தார். அப்போது ஈழத்தமிழ் எழுத்தாளர்களைச்சந்திக்கமுடியுமா என அவர் கேட்டபோது, அகஸ்தியரிடம்தான் நான் அவரை அழைத்துச்சென்றேன். அப்போதுதான் அகஸ்தியர் பெருநோய்ப்பட்டு இருந்தார். ஆஸ்பத்திரியில் இரண்டுமாதகாலம் சிகிச்சை பெற்றுவிட்டு வீடுதிரும்பியபோது –"செத்துப்பிழைத்து வந்தவேளை"யிலும்கூட, எழுத்துலகு சம்பந்தப்பட்டவர்களை சந்திப்பதில் அவருக்கு இருக்கும் ஆர்வத்தை அறிந்துகொண்டேன். 1991ல் ஒருநாள் வாராந்த சிகிச்சைக்காக இவரை ஆஸ்பத்திரிக்கு இவரைக்கூட்டிச்சென்றேன்–அன்று கோபர்ச்சேவை ஆட்சிக்கவிழ்ப்புச்செய்த வேளை, சோவியத்யூனியன், கம்யூனிஸ்ட்கட்சி, KGB உறுப்பினர்கள் பற்றி இவர்கூறிய கருத்துக்கள் அன்றைய நாளை பயனாகக்கழித்த இரட்டிப்புச்சந்தோசத்தை எனக்குத்தந்தன.

சிலமாதங்களின் பின், பாரிஸ் பல்கலைக்கழகம்–3 ன் ஆங்கில மொழியியல் (Centre de Recherche Linguistique Anglaise) ஆய்வுமைய கருத்தரங்கு ஒன்றுக்கு இவரை அழைத்துச்சென்றிருந்தேன். வீடு திரும்பும் வழியில் பேச்சுக்கிடையில், "மாஸ்ரர்! முதலாளிக்கு பெண்பால் என்ன?" என்று திடீரெனக்கேட்டார். "தொழிலாளிக்கு பெண்தொழிலாளி, முதலாளிக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாளியம்மா என்பதுதான் வழக்கத்தில் இருக்கிறது என்றேன். "நான் முதலாளினி எனும் சொல்லை என்நாவல் ஒன்றுக்கு அறிமுகப்படுத்தியிருக்கிறேன்" என்று சொன்னபோது இவரின் தமிழ் இலக்கணஅறிவை எண்ணிப்பிரமித்தேன். மேலும் இலக்கணம் தொடர்பாக பேச்சுநீண்டபோது, "தான் எட்டாவது படித்தபோதே, தாண்டியலங்காரத்தை சுயமாகப்படித்ததை சொன்னபோது என்னால் ஆச்சரியப்படாமல் இருக்கமுடியவில்லை.

"இலக்கணமும் இலக்கியமும் எனும் கட்டுரையை பாரிஸ்முரசு பத்திரிகையில் 92ல் என்னை எழுதவைத்தார். பாரிஸ்முரசு ஐரோப்பியமுரசு எனப்பெயர் மாறிய சிறிது காலத்தில் அதன் ஆசிரியராக்கப்பட்டேன். நான் ஆசிரியராக்கப்பட்டதற்கு மறைமுகமாக அவர்தான் காரணம். அக்கட்டுரையை எழுதுவதற்கு பலமுறை உரிமையுடன் வற்புறுத்தினார். அவர் வற்புறுத்தலினால் எழுதப்பட்ட அக்கட்டுரையை அப்பத்திரிகை பெருமையுடன் வெளியிடுவதாகக்கூறியிருந்தது. அக்கட்டுரைதான் நான் ஐரோப்பியமுரசுக்கு ஆசிரியராக வருவதற்கு முதற்காரணம். அக்கட்டுரையை நான் அப்பத்திரிகைக்கு எழுதாதுவிட்டிருந்தால், நான் பத்திரிகை ஆசிரியராகி இருந்திருக்கமாட்டேன் எனத்தான் நான் கருதுகிறேன். அக்கட்டுரையை அப்பத்திரிகை அலுவலகம் எடுத்துச்சென்று கொடுத்ததே இந்தப்பெரியவர்தான்! இந்த விதத்தில் நான் என்றும் அகஸ்தியருக்கு நன்றி உடையவன்.

இவர் எழுதி இலங்கையிலும், பிரான்ஸிலலும் ஒரு சலசலப்பை ஏற்படுத்திய 'எரிநெருப்பில் இடைபாதை இல்லை' எனும் சமூக நாவலை, 1993ல் வெளியிட்டபோது, தன் நாவலைப்பற்றி ஒரு திறனாய்வு செய்யும்படி அன்புடன் வேண்டினார். அந்நாவலுக்கு ஐரோப்பாவில் என்னிடம்தான் திறனாய்வு கேட்பதாகவும் சொன்னார். இலங்கையில் கிழக்குப் பல்கலைக்கழக விரிவுரையாளர் யோகராஜாவும், ஐரோப்பாவில் நானும் செய்தோம். அவரின் நாவலுக்கு நான் எழுதிய சமூகநலப்பார்வை அவருக்கு திருப்தியை தந்ததினால், அதை தனது 'அகஸ்தியர் பதிவுகள்' எனும் பதிவுநூலில் சேர்த்திருந்தார். நான் இதை ஒரு பெருமையாகவே கருதுகிறேன். அகஸ்தியரிடம் ஒருவர் திருப்தி வாங்குவது என்றால் அது சுலபமானதல்ல என்பது அவருடன் நெருங்கிப்பழகியவர்களுக்கு நன்கு தெரியும். அவர் கையால் குட்டுவாங்குவது என்பது "இலேசுப்பட்ட காரியமல்ல" என்பது என் கணிப்பு.

அகஸ்தியர் மார்க்சியத்தத்தவத்தை நேசிப்பவர். 1992ல் Fraçoise Giroud எனும் பெண்நிலை வாத பத்திரிகையாளர் 'ஜென்னி மார்க்ஸ்' எனும் நூலை எழுதி வெளியீடு நடந்ததைக்கூறினேன். அந்நூலில் ஒரு பிரதியை வாங்கித்தரும்படி கேட்டபோது, "மொழி புரியாவிட்டாலும்" மார்க்ஸியத்தின்மீதுள்ள பற்றை நூலை கேட்டதிலிருந்தே அறிந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டேன். ஜென்னி எவ்வளவு தூரம் கார்ல்மார்க்ஸ்ற்கு உதவியாக இருந்தார் என்பதை புத்தகத்தில் படிப்பது போல் சொன்னார். தான் சிறப்பாகக்கற்றுக்கொண்ட தத்துவத்தின் அடிப்படையில் தன்பேச்சை, தன் எழுத்தை ஆக்கிக்கொண்டவர். சிலர் தெரிந்துவைத்த பழையதையே திரும்பத்திரும்பச்சொல்லி தம்மைக்காட்டுவர். இவரோ வயதாகி கோலம் கலைந்து போயிருந்தாலும், காலத்திற்கேற்ற கருத்துக்களை அறிந்து கதைப்பார், எழுதுவார். இவரின் இலக்கியக்கொள்கை காலத்துக்கு, ஆக்கத்துக்கு ஏற்ப உணர்ச்சிக்கொள்கை, அழகியற்கொள்கை, சமுதாயக்கொள்கை என மாறுபடும்.

சிறுகதை, நாவல்களில் பாத்திரங்களைப் படைக்கிறபோது கூடுவிட்டுகூடு பாய்வதில் தான் வல்லவர் என்பதைக் காட்டுவார். எழுத்துக்களில் வரும் வார்த்தைகள் வித்தியாசமானவையாக, புதுமையானவையாக இருக்கும். அவற்றில் குறிப்பாக யாழ்ப்பாண மண்வாசனை கமழும் வில்லங்கச் சொற்கள் 'தாளடித்தமூப்பு, கெம்பிய சமுதாய வில்லங்கம், குறிவேர்வை, கிலிசகேடு' போன்றன என்நினைவில் நீங்காதவை. இவரின் ஆக்கங்களின் வாக்கியங்களில் பொருள் உடனடி முக்கியத்துவத்தை (more immediate importance) பொறுத்து சொல் ஒழுங்கு அமைவதை விளங்கிக்கொள்ளலாம்.

இவரின் உணர்வூற்றுருவகச் சித்திரமான "நீ" யில் சொல் கனத்தை, ஆழத்தை எவரால் அளவிடமுடியும். மேய்ப்பர்கள், பிரசாதம், சிறுகதைகளில் பாத்திரவெளிப்பாடு இவர் ஒரு நடிகரா என நினைக்கவைக்கும்!, ஒரு நூற்றாண்டின் இருதமிழ் நாவல்களில், இவர் ஆய்வு, இவரின் தமிழ் இலக்கிய வரலாற்று அறிவை உணரச்செய்யும். எரிநெருப்பில் இடை பாதையில்லை நாவலில் பிரேதம் ஒன்று சுடலை நோக்கிப் போவதை, "டாஞ்சாங் கிக்கிடு கிக்கிடு கிடுகிடு" எனும் ஒலி எழுப்புக்கவிதை மூலம் ஓர் ஓசை நயத்துடன் பண்பாட்டுக்கூறான பறைமேளத்தைக்கண்முன்னே நிறுத்தி, காதால் கேட்கும் உணர்வை ஏற்படுத்தி விடுகிறார். அகஸ்தியரின் எழுத்துநடை அகஸ்தியருக்கே உரியது. அது அவரின் தனிக்கைங்கரியம். இவரின் எழுத்து சமூகவியல், உளவியல், மொழியியல் நோக்கில் ஆராயத்தூண்டும். அதுதான் "அகஸ்தியம்". இதனால்தான் இவர் எழுத்துக்கள் பல்கலைக்கழக ஆய்வுக்கும் இலக்கியக்கண்காட்சிக்கும் எடுக்கப்டுகின்றன.

மனிதர் தாம் பழகுபவர்களிடம் மறைமுகமாக பொருளாதார இருப்பை, நடை உடை பாவனைமூலம் அறியமுனைவர். ஆனால் அகஸ்தியரோ தான் பழகும்ஒருவரிடம் அறிவுச்சுரப்பு எவ்வளவு இருக்கிறது என்பதைத்தான் அறியமுனைவார். தன் நெற்றிச்சுரப்பை பிறரின் அறிவுச்சுரப்புடன் கிளறிப்பார்க்கும் அகஸ்தியர் ஓர் அறிஞர் என்பதே என் கருத்து. "கற்றோரை கற்றோரே காமுறுவர்" என்பதற்கும் அகஸ்தியர் ஓர் எடுத்துக்காட்டு. ○



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரியாதைக்குரிய அகஸ்தியர்ஐயா அவர்களோடு...

அகஸ்தியர் ஐயா அவர்களை இலங்கையிலிருந்தபோது நான் அறிந்திருக்கவில்லை. அறிந்திருக்கவில்லை என்றால் எனக்கும் இலக்கியத்திற்குமான தொடர்பு அந்தளவிற்குத்தான் இருந்தது என்பதை நான் வெட்கத்தை விட்டு ஒத்துக்கொண்டுதான் ஆகவேண்டும்.

பாரிஸில், முற்போக்கு என்றசொல் எங்காவது தடக்குப்பட்டால்போதும், உடனே முற்போக்கு எழுத்தாளர் எஸ். அகஸ்தியர் என்று இலக்கியம் என்றால் கிலோ என்னவிலை என்றுகேட்கும் சாதாரண'வால்'கூட பினாத்துமளவிற்கு அகஸ்தியர் ஐயா அவர்கள் விளம்பரமாகியிருந்தார்.

முதன்முதலாக ஐயா அவர்களை ஓர் கலைநிகழச்சி மேடைஒன்றில்தான் பார்க்கக்கிடைத்ததில் இருவருக்குமே வருத்தம்தான். ஐயா மாலையை வாங்கி ஒலிவாங்கியில் கொழுவிவிட்டு பேசத்தொடங்கி இரண்டு நிமிடமும் போயிருக்காது. 'ஐயா காணும் இறங்கு' என விஸிலடியுடன் கூடிய குரல்கள். மெதுவாகச்சமாளித்துக்கொண்டு இறங்கிவிட்டார், மேடைபார்க்காமல் ஏறியதற்கு பாரிஸில் நல்லபாடம் என்று பின்னர் அவதானமானார்.

இதன்பின்னர் இரண்டொரு இலக்கியக்கூட்டங்களில் பார்க்கக்கிடைத்தது. முதுமை, நோயின்தாக்கம் நீண்டநேரம் அவரால் பேசமுடியாது. எந்தப்பேச்சிலும் மார்க்ஸியம் தொடர்பாக ஓர் குட்டிப்பிரசங்கம் இருக்கும். இலக்கியத்தில் இலக்கணப்பாடம் நடக்கும். இலக்கணப்பாடம் பாடசாலையில் படித்ததைவிட ஐயாவிடம் படித்தவை எனக்குப் பயன்மிக்கவை.

ஐயா அவர்களைச்சந்திக்கவேண்டும் என்ற ஆவல் இருந்தபோதும் நீண்டநாட்களாகச் சந்தர்ப்பம் கிடைத்ததில்லை. முதன் முதலாக 'தேடல்' சஞ்சிகைக்காக நண்பர் அருந்ததியுடன் அவரைச்சந்தித்தேன். முதற்சந்திப்பிலேயே பலவகைகளிலும் என்னைக்கவர்ந்து கொண்டவர். 'தேடலு'க்காக பின்னர் பலதடவைகள் சந்திக்க வாய்ப்புக்கள் கிடைத்தன. துர்அதிஷ்ட வசமாக ஏழு இதழ்களுடன் 'தேடலும்' நின்றுபோனது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் அகஸ்தியர்ஐயா நின்றுவிடவில்லை. 'தேடலை' தொடர்ந்து கொண்டுவரும்படி வற்புறுத்தினார்.
பல்வேறு காரணங்களினால் அது சாத்தியப்படாது போக, தனித்து ஒருசஞ்சிகையை இலக்கியசஞ்சிகையாக கொண்டுவர வேண்டினார். தொடர்ந்த அவரது உந்துதலில் இலக்கிய வேட்கையைக்காணமுடிந்தது.
'ஓசை' வெளிவந்தது. முதல் நான்கு இதழ்களும் அவரது வியர்வைக்கு காணிக்கை. பதினைந்து இதழ்கள் காத்திரமாக வெளிவந்த ஓசையின் முதலாவது ஆசிரியதலையங்கம் அகஸ்தியர் ஐயா அவர்களுடையதே என்பது ஆசிரியர்குழுவின் பின்னாலிருந்த உண்மை. முதல் நான்கு இதழ்களிலும் அகஸ்தியர் ஐயா அவர்களின் பக்கங்களே அதிகம். அகஸ்தியர், சத்தியமூர்த்தி, தீக்ஷண்யன், வசந்தன், எஸ்.ஏ. என பலபெயர்களில் எழுதினார். மருத்துவமனையில் சிகிச்சைபெற்றுக்கொண்டிருந்த வேளையிலும்கூட ஓசைக்காக எழுதினார். என்பதை மறக்கமுடியாது. ஓசையின் கலைஇலக்கியவாசகர் வட்டத்தின் நிர்வாக உறுப்பினர் என்பதும் பதிந்துகொள்ளத்தக்கது.

அந்த ஒருவருடகாலமும்தான் அகஸ்தியர்ஐயா அவர்களுடன் மிகவும் நெருங்கிப்பழகிய காலம். அவரது நோயின் நிமித்தம் – அவருடன் அளவுக்கதிகமாக விவாதங்களில் ஈடுபடமுடியாதநிலை – ஓசை அவரிடம் இருந்து விலகிக்கொண்டது. இது தன்னை 'ஓரங்கட்டியது' போன்ற பாதிப்பு அவருக்கு இருக்கத்தான் செய்தது. ஆயினும் அவ்வப்போது ஓசைக்கு ஆக்கங்கள் அனுப்பிக்கொண்டும் ஆலோசனைகள் வழங்கிக்கொண்டும் இருந்தார். விமர்சனங்களுக்கு அப்பாற்பட்ட மனிதர்கள் இருக்கவேமுடியாது. அகஸ்தியர் ஐயாவும் விதிவிலக்கானவர் அல்லர்.

இலக்கிய அரிச்சுவடியை எனக்குக்கற்பித்தவர் என்றவகையில் அகஸ்தியர்ஐயா அவர்களை நன்றியுடன் நினைவுகூரவேண்டிய கடப்பாடு எனக்குண்டு. தமிழில் தரமான எழுத்தாளர்களை எனக்குமுதலில் அறிமுகம் செய்துவைத்தவர் அவர்தான். சு. சமுத்திரம், புதுமைப்பித்தன், ல.ச.ரா. வல்லிக்கண்ணன், பிச்சமூர்த்தி. ஜானகிராமன்... என்று அவரது பட்டியல் நீளும்.
அகஸ்தியர் ஐயா அவர்களை அவர்களது எழுத்துகளிற்கும் மேலாக – அவரை ஒரு படைப்பாளி என்பதிலும்மேலாக, ஒரு நல்லஇரசிகனாக–நல்ல கலைஞனாக, ஓர் சுறுசுறுப்பான இயங்குசக்தியாகவே இனங்காண்கிறேன். அவரது ஆழ்ந்த படிப்பிற்குச்சான்றாக 'ஒரு நூற்றாண்டின் இரு தமிழ்நாவல்கள்' நூல் ஆய்வினைக்கொள்ளலாம்.
இலக்கியத்தரத்தில் சமரசங்களுக்கு இடம்வைக்காதவர். மூன்றாம் நான்காம்தரமான படைப்புக்கள் மீதெல்லாம் ஈவிரக்கமில்லாதவிமர்சனங்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்வைப்பார். இதன் நிமித்தம் பல எதிர்ப்புக்களையும் சம்பாதித்துக்கொண்டவர்.
நல்ல நகைச்சுவையாளர். அவரது பாட்டும் ஆட்டமும் மிகுந்த ரசனைக்குரியன. கர்நாடகசங்கீதம் பயின்றவர். மிருதங்கம் வாசிக்கத்தெரிந்தவர். தியாகராஜபாகவதர் கீர்த்தனைகள், நாட்டுக்கூத்துப்பாடல்கள் பாடும்போது மெய்சிலிர்க்கும்.
நேரம், ஒழுங்கு என்பவற்றில் மிகுந்த கண்டிப்பானவர். எல்லாவற்றிற்கும் மேலாக ஓர் நல்ல மனிதர். கோபித்துப்பழகத்தெரியாதவர்.
அவருடன் பழகியகாலங்கள் இனிமையானவை. பயன்மிக்கவை. என்றும் மறக்கமுடியாதவை.

பிரிவினால் துயருறும் அன்பான குடும்பத்தினர் நண்பர்களுடன் நானும் பகிர்ந்துகொள்கிறேன்.

**- மனோ.** (ஓசை)

○





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈடுசெய்யமுடியாத பேரிழப்பு!

அகஸ்தியர் ஐயா இறையடிசேர்ந்த செய்திகேட்டு, அதிர்ச்சிக்கும் ஆழ்ந்த கவலைக்கும் உள்ளானேன். அகஸ்தியர் ஐயாபற்றிய ஆய்வுக்கட்டுரையைமுடித்து, ஐயாவிடம் காட்டுவதற்காகப் பேரவாக்கொண்டிருந்த வேளையிலே, ஐயாவினுடைய மறைவைக்கேட்டு சொல்லொணாத்துயரத்தில் ஆழ்ந்தேன். அகஸ்தியர் ஐயாபோன்ற ஓர் உன்னத ஒப்பற்ற உணர்வுபூர்வமான படைப்பாளியை இழந்தமை எமக்கு மட்டுமல்ல, ஈழத்து இலக்கிய வரலாற்றுக்குமே ஈடுசெய்யமுடியாத பேரிழப்பாகும். ஆனால் என்னைப்பொறுத்தவரைக்கும் அகஸ்தியர் ஐயா ஒருபோதும் எம்மைவிட்டு நீங்கவில்லை என்றேகூறுவேன். ஏனெனில் அவரின் ஒவ்வோரு படைப்பிலும் நான் அவரைக்காண்கிறேன். அவரின் ஒவ்வோரு சொல்லிலும் அவரை நான் உணர்கிறேன். அதனால் அகஸ்தியர் ஐயா எம்முடன் என்றுமே வாழ்ந்து கொண்டுதானிருக்கிறார். இனியும் வாழ்வார். நான் அவரோடு தொடர்புகொண்டு சொற்ப நாட்கள்தாம் ஆகின்றன. எனினும் அன்பான, பண்பான, பரந்த உள்ளம் கொண்ட அகஸ்தியர் ஐயாவின் நினைவு எப்போதும் என்னைவிட்டு நீங்காது. ஓர் உன்னத ஆற்றல் மிக்க எழுத்தாளராயிருந்து, இன்று அமரத்துவம் எய்திய முதுபெரும் எழுத்தாளரான அகஸ்தியர் ஐயாவுக்கு, என் சார்பாகவும் எமது பல்கலைக்கழக தமிழ்மாணவர் சார்பாகவும் கண்ணீர் அஞ்சலிகள்.
அத்தோடு அகஸ்தியர் ஐயா குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்தெரிவித்துக்கொள்கின்றோம்.

அன்புடன்,
நன்றிமறவா
**ந. கமலினி**
'Siri Vasa' Pallemulla, Halloluwa.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதுபெரும் முற்போக்கு எழுத்தாளர்

*திரு. அகஸ்தியரின் மறைவு முற்போக்கு இலக்கியத் துறையுடன் நெருக்கமாக இருந்தவர்களை மிகுந்த துயரில் ஆழ்த்திய ஒரு நிகழ்வாகும். இலங்கையில் இருந்த காலத்திலும் புலம்பெயர்ந்து பாரிஸில் வாழ்ந்த காலத்திலும் சளையாமல் எழுதிவந்த அவரது உழைப்பு என்னை வியக்கச்செய்தது. கடந்த ஆறேழுவருட காலத்திலும் கடுமையான நோய்வாய்ப்பட்டிருந்த அவரது எழுத்தில் அவரது உடற் தளர்ச்சியின் சாயலைக்காண்பது கடினம். 1980 களில் சோவியத்யூனியனிலும் அதன்செல்வாக்கிற்குட்பட்டிருந்த நாடுகளிலும் அதிகாரத்திலிருந்த கட்சிகளது அதிகாரம் சரியும் சாடை தென்பட்டபோது சோவியத்சார்புக்கட்சியினர் பலரிடையே ஏற்பட்ட மனத்தளர்வு அவர்களை அரசியலிலிருந்து ஒதுங்க வைத்தது. அகஸ்தியர் இறுதிவரை சோஷலிசத்தின் வெற்றிமீது மிகுந்த நம்பிக்கையுடையவராய் இருந்தார். தமிழ்மக்களது விடுதலைப்போராட்டம் தொடர்பாகவும் அவரது நிலைப்பாடு உறுதி மிக்கதாக இருந்தது.*

*எனக்கும் அகஸ்தியருக்கும் அரசியலில் மட்டும் அல்லாமல் இலக்கியந்தொடர்பான பலவிஷயங்களிலும் மிகுந்த கருத்து வேறுபாடு இருந்தது. ஆயினும் அவருடன் நேரடியான கடிதத்தொடர்பு தொடங்கிய 1990முதல் அவருடனான சந்திப்புகளிலும் கடிதப்பரிமாறல்களிலும் பரஸ்பர மரியாதையுடன் கடுமையான கருத்துவேறுபாடுகளைத்தெரிவிப்பது அவருக்கும் எனக்கும் இயலுமாயிருந்தது. இத்தகைய நல்லுறவு எல்லோருக்கும் வாய்ப்பதில்லை. எல்லோருடனும் இயலுமாவதில்லை. இக்குறுகியகாலத்தில் வளர்ந்த எங்களதுநட்பு அவரது மறைவாற் பறிக்கப்பட்டுவிட்டது. ஆயினும் அவருடனான உறவின் இனிய நினைவுகள் எனது வாழுநாள்வரை தொடரும்.*

*அவரது மறைவால் வாடும் அவரது குடும்பத்தினருக்கு மட்டுமன்றி அவரது எழுத்துலக அன்பர்கள் அனைவருக்கும் அனுதாபங்களைத்தெரிவித்துக்கொள்கிறேன்.*

**-சி. சிவசேகரம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதஇலக்கியம் நீ

ஓர் இலக்கிய ஒளி
சென்றெம்மை விட்டகன்றது
ஒரு நம்பிக்கை வழி – எம்
கைவிட்டகன்றது.
காலம் ஒப்புக்கொண்ட
ஓர் இலக்கியவாதி – தமிழ்
ஈழம் தந்த ஒப்புயர்
கலை நுட்பவாதி.......நீர்
இன்றி தள்ளாடும் கலை
இலக்கிய வழித்தோன்றல் நாம்!

அலை அடித்தால் தான்
கடலுக்குப்பெருமை
நீர் அலை வழிந்தால்தான்
மலைக்குப் பெருமை
மழை பெய்தால்தான்
வானத்திற்குப் பெருமை
அகத்தியர் இருந்தால்தான்
இலக்கியத்திற்குப் பெருமை–உன்
இலக்கியம் வாழும்வரை
எமக்குப் பெருமை.

தனக்கென இவர் இலக்கியம் இல்லை
உலகென வாழும் இவர் இலக்கியம்
மூன்று தலைமுறை இலக்கியவாதி
தன்னினசார் இலக்கியம் படைக்க
காலனவன் விடவில்லை!
இவர் புதுமை இலக்கியம் தொடரவேண்டும்
இல்லை அவர். . . ஆனால் தொடரும்
எம்மின தமிழ் இலக்கியம்!

காலம் அழிந்தாலும்
காலத்தால் அழியாத வரலாறாகி – எம்
மனங்களில் வாழத்தொடங்கிவிட்ட
மனித இலக்கியம் நீ!

அகத்தியர் என்னும் பதம் – எம்
அகத்தினில் எழுப்பிவிட்டு
வரலாற்றை முடித்துவிட்டு –உன்
நிதம் வாழும் குரலானாய் நீ
எத்தனை கோல(ஷ)ங்கள் எழுப்பினாய்
எங்கள் மனதில்
அத்தனையும் கலைந்தன – நீர்
விட்டன கண்கள்!
நீர் விட்ட இடத்தைத்தேடுகின்றோம்
இன்னும்
தொட்டுப்பார்க்க
முடியவில்லை உங்கள்
பார்வையை எட்டி
பிடிக்கவும் முடியவில்லை
வானின்று அருள்வாய்
தாழ்நின்று பெறுவோம்!

**- கீழ்கரவை பொன்னையன்.**
'பொன் கலைக்கூடம்'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்த மனிதனை எம் நெஞ்சில் சுமப்போம்.........



இடையறாது இயங்கிய
இலக்கிய பேரியக்கம்
இயக்கவியல் ஈய்ந்த
இனிய 'கருத்தாக்கம்'
மடை திறந்தாற் போல்
பாய்ந்து வந்த 'படைப்பாக்கம்'
இடையினில் தன்னை நிறுத்தி
ஓய்வெடுக்கச் சென்றதோ
ஓலங்கள் வேண்டாம்
'அகஸ்தியக் கருவூலங்கள்'
அருகிருந்து வழிகாட்டும்
மானுட நேயனுக்கு
மனைவியாய் வாழ்ந்த தாயே
கண்ணீர் துடைத்து கொஞ்சம்
நிமிர்ந்து நோக்குங்கள்
இங்கே இலக்கியப் பூக்கள் அல்லவா
உங்கள் இதய நாயகன் உறங்க
மஞ்சம் அமைத்துக் கொடுத்திருக்கின்றன
உங்கள் காதல் வாழ்வில்
மலர்ந்த நான்கு செல்வங்கள்
வெறும் வாரிசுகள் மட்டுமா?
ஒரு இலக்கிய விளை நிலத்தில்
விளைந்த முத்துக்கள் அல்லவா
ஒரு தலைமுறை எழுத்தாளனின்
இழப்பு உங்களுக்கு, எங்களுக்கு
மட்டுமா?
ஒரு தேசத்துக்கு!
ஒரு மொழிக்கு!
ஒரு புது உலகுக்கு!
அழுவதை நிறுத்தி
அந்த மாமனிதனை
எம் நெஞ்சில் சுமப்போம்!

- அருந்ததி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகஸ்திய அன்பும் பண்பும்.

**சொற்**ப காலமே நேரில் அறிமுகமாகி, நீண்டகால நட்புப்பூண்ட எனதருமைத்தோழர், மானுடநேயப்பண்பாளர் ஈழத்து கலைஇலக்கிய அரசியல் உந்துசக்திகளில் ஒன்றான அகஸ்தியரின் மறைவுகேட்டு மேனி நடுங்குகிறது. நெஞ்சம் பதறுகிறது.

விபரம் தெரிந்த காலம்முதல் இறுதிக்காலம்வரை, அடக்கி ஒடுக்கப்பட்டுச் சுரண்டப்படும் மக்களுக்காகவும், நம்பிக்கை நாணயம் நீதிக்காக நேர்மையுடனும் துணிவுடனும் இதயசுத்தியுடன் ஓயாது போராடியும், பேனா பிடித்தும் வாழ்ந்த நம் அகஸ்தியர், எம்மக்களை தம் நெஞ்சார நேசித்தாரோ அம்மக்களின் துயரநிலையைக்காண விரும்பாது போலும் கண்களை மூடிவிட்டார்.

சொல்லையும் செயலையும் ஒன்றாகவே கொண்டு
நகைச்சுவை உணர்வு என்றும் குன்றாது
எவர்மீதும் நிபந்தனையற்ற நட்புப்பூண்டு
ஏமாற்றத்திலும், தோல்வியிலும் உத்வேகம் பெற்று
சகலகருத்துக்களையும் தேடியலைந்து கிரகித்து
நெறிப்படுத்தலுடன் கூடிய விமர்சனம் செய்து
பரந்துபட்ட சமுதாயப்பார்வையுடன் இலக்கியம் படைத்து
மனிதனுக்குமேல் எதுவும் இல்லை என்றும்
எங்கள் வாழ்வினிலே துன்பமே இல்லை என்று
வாழ்வது ஈழத்துஅகஸ்தியம்.

தமது நோயுற்றமுதுமைப்பருவத்தில்கூட தம்மைப்பார்க்கவரும் சிறுபராயத்தினரைக்கூட எழுந்துநின்று வரவேற்று கூடவே இருத்தி உணவழித்து மகிழும் பண்பை பலமுறைகண்டு வியந்துள்ளேன். தனிமையில் நீண்டநேரம் வெளியில் இருந்து சம்பாஷித்துவிட்டு வருகிறோம். "இவ்வளவு நேரமாக என்னகதை" வினவுகிறார் துணைவியார். "வேறென்ன காதல் கதைதான்" என்று ஒழிவுமறைவின்றி வெளிப்படையாகவே கூறுகிறார். "காதற்கதை கதைக்கிற வயதைப்பார்" என்கிறார் மனைவியார். வியந்து நோக்கினேன் நான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹைகேற்றிலுள்ள கார்ல்மார்க்ஸ் சமாதிக்கு அழைத்துச்செல்கிறேன். குளிரில் நடுங்கியவாறே வருகிறார். சற்றுச்சணங்கி விடுகிறது. எவ்வளவு கேட்டும் காவலாளி மூடியகேற்றைத்திறக்க மறுக்கிறார். ஏமாற்றத்துடனும் சோகத்துடனும் திரும்பிவரும்பொழுது திடீரென்று கலகலத்துச்சிரித்தவாறே கூறுகிறார். "காவலாளிக்கு கார்ல் மார்க்ஸின் பெருமை தெரியாவிடினும் எம் நிறம் தெரிகிறது". திகைத்தே போய்விட்டேன். இந்த ஏமாற்றத்திலும் எப்படிச்சிரிக்க முடிகிறது.

இன்னொரு சம்பவம். நோயின் கொடுமையால் கைவிரல்கள் குறண்டிக்கொள்கிறது. பேனா பிடிக்கமுடியவில்லை. புத்தகம் தூக்க முடியவில்லை. மறைந்த எழுத்தாளர் டானியல் பற்றிய கதை திரும்புகிறது. அடிமைகளும் கானலும் அருமையான நாவல் என்றேன். நான் படிக்கவில்லை, எங்கிருந்தாலும் வாங்கிக்கொண்டுவந்து படித்துக்காட்டு என்று எனது இரண்டுகைகளையும் பற்றிக்கொண்டு உணர்ச்சிவசப்படுகிறார். என்னால் அவரின் ஆசையை இறுதிவரை நிறைவேற்ற முடியவில்லை.

— *இ. உக்கிரப்பெருவழுதி.*
(லண்டன்)

**'மானிடநேயத்தோடு சமுதாயமுன்னேற்றத்திற்கும் அதன் மாற்றத்திற்கும் எழுதும் படைப்பாளிகளின் முற்போக்கு கலைஇலக்கியங்கள்,**
**பிற்போக்கு கலை இலக்கியங்களை வேரடி மண்ணோடு கிள்ளி எறியவேண்டும் என்ற பாரியபணியில்,**
**சமூகவியல் பாங்காக எழுதும் இயக்கவியல் முற்போக்கு கலை இலக்கியங்கள் சகிதம் ஈழத்து முற்போக்கு கலைஇலக்கியங்களும் இன்று கைகோர்த்து முன்னணியில் திகழ்கின்றன.**

**நான் இந்த முன்னணிப் படைப்பாளி'**

**- எஸ். அகஸ்தியர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றியுடன் நினைவு கூருகின்றோம்...

எங்கள் அருமைப்பப்பாவை இறுதிவழி அனுப்ப நேரில் வந்து அஞ்சலி செலுத்தியோர், மலர்வளையம் அனுப்பிய ஸ்தாபனத்தினர், அனுதாபச்செய்திகள்–பிரசுரங்கள் வெளியிட்ட தனிப்பட்ட அன்பர்கள், கலை இலக்கிய ஸ்தாபனங்கள், பத்திரிகையாளர்கள் மற்றும் தொலைபேசி, தொலைஎழுதி(Fax), கடிதவாயிலாக இலங்கை, இந்தியா, அவுஸ்திரேலியா, கனடா, இலண்டன், ஜேர்மனி, டென்மார்க், சுவிஸ், நோர்வே, கொலண்ட் மற்றும் பிரான்ஸின் பல்வேறு நகரங்களிலிருந்தும் இரங்கற்செய்திகளை அனுப்பிவைத்த அன்பர்கள், ஆதரவாளர்கள், கலைஞர்கள், கவிஞர்கள், எழுத்தாளர்கள், இலக்கியவாதிகள், அறிஞர்கள், பேராசிரியர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், இலக்கியஆர்வலர்கள் .....

செய்தியறிந்து விசேடஅறிவுப்புக்களையும், அஞ்சலிகளையும் ஒலிபரப்பிய லண்டன் B.B.C. தமிழோசை, 'SUN RISE' வானொலி, சர்வதேச தொலைபேசிச்செய்தித்தொடுப்புச்சேவைகள்...

எங்கள் பப்பா ஓர் எழுத்தாளர் என்றறிந்ததும், விசேட கரிசனை எடுத்து அவரது ஆயுளைநீடிக்க அரும்பாடுபட்ட பாரிஸ் 'HOTEL DIEU' வைத்தியசாலையைச்சேர்ந்த Dr. James, அவர் சார்ந்த தாதிமார்கள், உதவிவைத்தியர்கள்....

அஞ்சலிப்பிரசுரங்களைத்தொகுத்து 'ஓர் இலக்கிய மூச்சு' என்றதலைப்பில். தொகுப்பாக்கிய பாரிஸ் தமிழீழக்கலைஞர் ஒன்றியத்தினர்...

முப்பதாவது நினைவு தினத்திற்கான ஏற்பாடுகளைச்செய்வதில் சகலவிதத்திலும் உதவிய நண்பர்கள், ஸ்தாபனத்தினர்கள்...

மற்றும் இம்மலரை வெளியிடும் சிரமமான பணியில் அயராதுழைத்தநண்பர்கள்...

அனைவரையும் பப்பாவின் பெயரால் இதயபூர்வமாக நினைவுகூருகின்றோம்.

அன்புத்துணைவி : நவமணி அகஸ்தியர்.
பிள்ளைகள்: நவஜோதி, நவஜீவா, நவஜெகனி.
மருமக்கள் : S.B. ஜோகரட்ணம், M.P. ராஜதாஸன், சுஜி நவஜீவா.
பேரப்பிள்ளைகள் : ஜனிக்ராஜ், சுஜீவா, தீக்ஷ்ணா, சுஜீனா.

*9, Rue Galleron, 75020 Paris, France. Tél. 40 37 42 46*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org